Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 359

ஞாயிற்றுக்கிழமை
20 நவம்பர் 2022

கார்த்திகை 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=

# காணிப் பிரச்சினைக்கு 8 தனியான குழுக்கள்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**வவுனியா, நவம்பர் 20**

**காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாகாண மட்டத்தில் 8 குழுக்களை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இதன்படி வடக்கு மற்றும் தெற்கில் நிலவும் காணிப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.**

15



# ஜனாதிபதியின் வருகைக்கு எதிராகக் கடும் போராட்டம்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியா மாவட்டச் செயலகம் முற்றுகை

வவுனியா, நவ. 20
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குக்கான பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றுத் தீவிர போராட்டத்தை முன்னெடுத்தனர். வடக்கு மாகாணத்

13

# சர்வதேச விமான நிலையமாக வவு. விமான நிலையம் மாறும்

## ஜனாதிபதி இவ்வாறு நம்பிக்கை

வவுனியா, நவ. 20
வவுனியா விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நாம் தற்போது ஆராய்ந்து வருகின்றோம் என ஜனாதிபதி

15

# தவறி வீழ்ந்து இளைஞர் பலி

## இன்னொருவருக்குக் காயம்

கிளிநொச்சி, நவ. 20
பளைபொலிஸ்பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி, முகாவில் பகுதியில், ஆலயக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

16



# போராட்டம் காசுக்கான நாடகமாம்!

## பொலிஸார் விஷமப்பேச்சு

வவுனியா, நவ. 20
காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்றும் போர்க்குற்றங்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை

15

# மாணவனின் பையில் கஞ்சா கலந்த மாவா

## பாடசாலையொன்றில் முன்னெடுக்கப்பட்ட சிறப்புச் சோதனையில் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி, நவ. 20
கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில் மாணவன் ஒருவரின் புத்தகப்பையில் இருந்து கஞ்சா கலந்த மாவா பாக்கு மீட்கப்பட்டுள்ளது.

14

# ஆலயக் கிணற்றிலிருந்து ஒருவர் சடலமாக மீட்பு!



விரிவு - பக். 15

# ஒரு தாய் மக்களாகவே 75ஆவது சுதந்திரதினம்!

## வவுனியாவில் ரணில் பேச்சு

வவுனியா, நவ. 20
வடக்கு- கிழக்கு தமிழ் மக்களின்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும். போரால், பயங்கரவாதத்தால் இந்தநாட்டின் இறையாண்மைக்கு ஏற்பட்டுள்ள பிரச்

13



CMG

வீடெங்கும் சந்தோஷத்தைப் பாதுகாக்கும்

S-lon inside

சுவர்களுக்குள் ஓடும் நீர்க் குழாய்கள் வீட்டிலே சந்தோஷத்தைப் பாதுகாக்கத் துணை நிற்கின்றன.
உங்கள் வீட்டுச் சுவர்களுக்குள்ளும் S-lon inside என்றால்
உங்கள் சந்தோஷம் என்றுமே நிலைத்திருக்கும்.

எஸ்-லோன் லங்கா (பிரைவட்) லிமிட்டெட், 515/7, டி.பி ஜெயா மாவத்தை, கொழும்பு 10
தொ.பே: 011 4 760 100 | பக்ஸ்: 011 4 760 170, 4 760 175
மின்னஞ்சல்: slonsales.slon@cmg.lk | www.facebook.com/

S-lon
வாழ்விற்கு நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன வரி செலுத்தாத காணிகள் நடுக்கட்டல் சட்டத்தில் விற்பனை

## சாவகச்சேரி நகர சபை தீர்மானம்

**யாழ்ப்பாணம், நவ.20**

**சாவகச்சேரி நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நீண்ட காலமாக ஆதன வரி செலுத்தாத காணிகளை நடுக்கட்டல் சட்டத்தின் மூலம் விற்பனை செய்ய சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் சிவமங்கை தெரிவித்தார்.**

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நீண்ட காலமாக ஆதன வரி செலுத்தப்படாத காணிகள் நடுக்கட்டல் மூலம் விற்பனை செய்யவும், டெங்கு அதிகரித்து வரும் நிலையில் பராமரிப்பின்றிக் காணப்படும் காணிகள் மற்றும் குடியிருப்புகளையும் பொறுப்பேற்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான ஆதனங்களின் உரிமையாளர்கள் புலம்பெயர் நாடுகளில் உள்ளதால் வருடக் கணக்கில் ஆதன வரி செலுத்தப்படாமல் உள்ளன. அதனால் சபைக்குப் பெரும் வருமான இழப்புகள் ஏற்பட்டுள்ளன. அதேநேரம் ஆதனங்கள் கவனிப்பின்றி உள்ளமையால் டெங்குத் தொற்று அதிகரிப்பதற்கும் ஏதுவாக உள்ளது. இது தொடர்பில் அண்மையில் நடந்த விசேட அமர்வில் தவிசாளர் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

நீண்டகாலமாக ஆதனவரி செலுத்தாத காணிகளை நடுக்கட்டல் மூலம் ஒரு பகுதியை விற்பனை செய்து கிடைக்கும் தொகையில் சபைக்கு வருமதியாக உள்ள நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும், அத்துடன் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்பின்றிக் காணப்படும் காணிகளை சபை துப்புரவு செய்து செலவிடப்படும் தொகையைப் பெற காணியின் ஒரு பகுதியை விற்பனவு செய்து பெற்றுக் கொள்ளவேண்டும் என்று உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

முதல் கட்டமாக ஆதனவரி நிலுவையாகக் காணப்படும் காணிகளை நடுக்கட்டல் செய்வதற்கு உடனடியாக காணிகளில் 15 நாள்கள் கால அவகாசம் வழங்கி அறிவித்தல் வழங்க வேண்டும் என்றும், வழங்கப்படும் காலக்கெடுவுக்குள் தொகையை செலுத்தாத காணிகளை உடனடியாக நடுக்கட்டல் மூலம் விற்பனை செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நகரசபைத் தவிசாளர் சிவமங்கையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது இது தொடர்பான தீர்மானம் கடந்த சபை அமர்வில் ஏகமனதாக எடுக்கப்பட்டது எனவும் காரணமாக செலவுகளை ஈடுசெய்வதற்காகவே இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

நடுக்கட்டல் சட்டம் என்பது பிரதேச சபைகளுக்குரிய ஆதன வரியை செலுத்தாதவர்களுக்கு எதிரான ஒரு சட்டமாகக் காணப்படுவதோடு நிலத்துடன் வீடு இருக்குமாயின் குறித்த வீட்டில் உள்ள அத்தியாவசியமற்ற ஆடம்பரப் பொருள்களை பறிமுதல் செய்து பிரதேசசபை ஆதனவரிக்குரிய வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் மாறாக பொருள்களின்றி அசைவற்ற சொத்துக்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவற்றை விற்பனை செய்வதற்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கு அதிகாரம் காணப்படுகின்றது. (எ-9,125)

## 5 லட்சம் ரூபா நிதியில் அதிபருக்கு பிரியாவிடை

முல்லைத்தீவு, நவ. 20

பாடசாலை அதிபர் ஒருவரின் பிரியாவிடை நிகழ்வுக்காக சுமார் 4 லட்சத்து 82 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவிலுள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையின் நலன்விரும்பிகள் இதுதொடர்பில் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவிலுள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற அதிபருக்கு மணிவிழா செய்வதாகக் கூறி ஆசிரியர் நலன்புரிச் சங்கத்திலோ அல்லது பாடசாலையின் வங்கிக் கணக்கிலோ நிதியை .பெற்றுக்கெள்ளாமல் மிகப்பெரிய நிதி சேகரிக்கப்பட்டு மணிவிழா இடம்பெற்றுள்ளது.

இதற்கென பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்களிடமும் பணம் அறவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபரைக் கௌரவிக்க வேண்டியது வரவேற்கத்தக்க விடயம். ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பல லட்சம் ரூபா செலவில் நிகழ்வு நடத்த வேண்டிய தேவையில்லை.

அதுமட்டுமல்லாது பாடசாலை சார்ந்த நிர்வாகக் கட்டமைப்புக்களின் வங்கிக் கணக்குகள் ஊடாக நிதி சேகரிக்கப்படாமல் நிதி கையாளப்பட்டுள்ளது.

எனவே, இதுதொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சு உடன் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-27)

# தமிழரின் இனப்பிரச்சினைக்கு இந்தியா பாத்திரவாளியல்ல!

## மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 20

தமிழர்களின் எல்லா இழப்புகளுக்கும் தமிழக அரசியல்வாதிகளையும் இந்தியத் தலைவர்களையும் காரணம் காட்டி கரித்துக் கொட்டுவதை இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் முதலில் நிறுத்த வேண்டும். 1940களில் சிங்களத் தலைமைகளே தர முன்வந்த சமஷ்டியை எட்டி உதைத்து ஜனப்பரம்பலுக்கு நியாயமேயற்ற 50:50 என்ற கோரிக்கையை முன்வைத்து அரசாங்கம் கைவிரிக்கும் நிலைமையை ஏற்படுத்தியது யார்? இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும், மாகாணசபை முறைமையையும் எட்டி உதைத்தது எவர்? வரலாறு முழுக்க செய்துவிட்ட சுயதவறுகளை முதலில் நாம்தான் தேடவேண்டும்.

இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவருமான மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழர்கள் எதிர்கொள்ளும் அவலநிலைக்கு தமிழ் அரசியல்வாதிகளே காரணம். இரண்டாவதாகவே பேரினவாத சிங்கள அரசைக் குறிப்பிடலாம்.

இந்தியா ஒரு நாடு, இலங்கை இன்னொரு நாடு. தமது 'தேச நலன்கள்' அவரவருக்கு முக்கியம். இந்தியர்கள் எமக்காக வரக்கூடிய தொடுவானம் எது வரை என்பதை எமது தமிழ் அரசியல் தலைவர்கள் விளங்கியிருக்கவேண்டும்.

1940களில் சிங்களத் தலைமைகளே தர முன் வந்த சமஷ்டியை எட்டி உதைத்து



நியாயமேயற்ற 50:50 என்ற யதார்த்தமற்ற கோரிக்கையை முன்வைத்து கைவிரிக்கும் நிலைமையை உருவாக்கியது யார்? தமிழர்களுக்குத் தீர்வை வழங்கும்முகமாக முன்வைக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும், மாகாணசபை முறைமைகளையும் எட்டி உதைத்தது யார்?

இன்று, 'பிச்சை வேண்டாம், நாயைப் பிடி' என்ற மாதிரி, 13ஆம் திருத்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என ஓலமிடுவதால் என்ன பயன்?

இலங்கைத் தமிழருக்காக கருணாநிதி, தமிழ் நாட்டில் இரண்டு முறை தனது திராவிட முன்னேற்றக் கழக மாநில ஆட்சியை இழந்துள்ளார் என்பது எத்தனை தமிழ் அரசியல் தலைவர்களுக்கு ஞாபகம் உண்டு.?

எனவே, தமிழக அரசியல்வாதிகளையும் இந்தியத் தலைவர்களையும் கரித்துக் கொட்டுவதை நிறுத்தி வரலாறு முழுக்க செய்துவிட்ட சுயதவறுகளை நாம்தான் தேடவேண்டும். அதன் போதே தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு கிட்டும் - என்றார். (ச-இ)

## நல்லூர் பண்பாட்டு கலைக்கூடத்தின் நட்பெழுச்சி ஒன்றுகூடல்

நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் நடத்தும் மாதாந்த செவ்வழி நயன நட்பெழுச்சி ஒன்றுகூடல் இன்று காலை 7.30 மணிக்கு நல்லூர் மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு சைவத்தமிழ் விழுமியங்களையும் கலாசார கோட்பாடுகளையும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தும் முகமாக இடம்பெறவுள்ளது.

இதன்போது மாலைகட்டுதல், கோலம்போடுதல், விவாத மேடைகள், தோரணம் கட்டுதல், பிரசாத வகைகள் தயாரித்தல் உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச)

## யாழிலுள்ள உணவகங்களில் நேற்று சோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள உணவகங்களில் யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் சோதனை நடவடிக்கை நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது உணவகங்களில் உள்ள குளிர்சாதனப் பெட்டியில் சுகாதாரச் சீர்கேடாகவும் தீங்கு விளைவிக்கும் வகையில் வைத்திருக்கப்பட்ட மீன், இறைச்சி உள்ளிட்ட உணவுப் பொருள்கள் அழிக்கப்பட்டன.

அத்துடன் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான நிற ஊட்டிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்களும் அழிக்கப்பட்டன. அதன்பின்னர் உணவகம், ஊழியர்கள் பின்பற்றவேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் எடுத்துரைக்கப்பட்டன.

மேலும் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தும் இரண்டு வாரங்களில் சீர் செய்யப்படாவிடின் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று உணவக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (ஒ-14,26)

# ஊடகத்துறை மாணவர்களின் ஆவணப்படங்கள் திரையிடல்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் திரையிடப்படவுள்ளன.

'கடல்விளை அமுதம்', 'மைதானம்', 'வாழைக்குலைச் சங்கம்', 'மிதியுந்து', 'உளி தொடாக்கலை', 'அழிவடைந்து போன பழமை', 'செம்மலையின் கண்ணீர்', 'வன்னியின் ஆவுடையூர்', 'வானவில்', 'நந்திக்கடல் மீன்பிடி', 'அம்மா', 'மறைந்திருக்கும் தொன்மம்', 'இருளொளி', 'தூய மரச்செக்கு எண்ணெய்' என சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசுகின்ற 14 ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளன. (ஒ-14,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கள் சூறையாடப்படுவதால் நாடு சோமாலியாவாக மாறும்!

*தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஆதங்கம்*

**யாழ்ப்பாணம், நவ. 20**

**தமிழர் தாயகப் பகுதிகளில் அபிவிருத்தி என்ற போர்வையில் அரசாங்கம் வளங்களைச் சூறையாடுவதால் சோமாலியா, எத்தியோப்பியா போன்ற நாடுகளைப் போன்று இங்குள்ள மக்களும் எதிர்காலத்தில் பசி, பட்டினியால் செத்து மடிகின்ற நிலைக்குத் தள்ளப்படுவர்.**

இவ்வாறு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இன்பம் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வலி.வடக்கில் பூர்வீகமாக இருந்த மயிலிட்டித்துறைமுகம் அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களிடம் இருந்து பறிக்கப்படுகின்றது. பருத்தித்துறை துறைமுகத்தை சர்வதேசத் தரம்வாய்ந்ததொன்றாக அபிவிருத்தி செய்வதாக ஆசியா அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் அபிவிருத்தி செய்ய முன்னெடுப்புக்கள் இடம்பெறுகின்றன.

ஆழ்கடல் மீன்பிடியை முடக்குவதை இலக்காகக் கொண்டு சில நிறுவனங்கள், 10 வருடங்களின் பின் கடலில் மீன் பிடிக்க முடியாது என்றும் பண்ணை வளர்ப்பு ஊக்குவிக்கப்படவேண்டும் என பொய்யான தகவல்களைப் பரப்பி வருகின்றன.

இவ்வாறான செயல்களால் எமது வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதால் எமது எதிர்காலம் படுகுழியில் தள்ளப்படும் அபாயம் ஏற்படும்.

சோமாலியா - எத்தியோப்பியா போன்ற நாடுகளில் விவசாயம், மீன்பிடி ஆகியவை காணப்பட்டபோதும் அந்த நாட்டினுடைய வளங்கள் துஷ்ரயோகம் செய்யப்பட்டதால் மக்கள் இன்று பஞ்சம், பசி, பட்டினியால் செத்து மடிகின்றனர். இதேபோன்ற நிலையே இன்னும் 25 வருடத்திலோ 50 வருடத்திலோ இங்கும் ஏற்படும்.

ஆனால், சம்பந்தப்பட்ட தரப்பினரோ, அரசியல் தலைவர்களோ எமக்கு ஆக்கபூர்வமான தீர்வுகள் எதனையும் பெற்றுத்தரவில்லை.

எமது வளங்களை பல்தேசிய நிறுவனங்களுக்குக் கையளிப்பதை தடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் குரல் கொடுக்கும் - என்றார். (ச-20,27)

## இலங்கைக்கு அனுப்புவதை எதிர்த்து இரு அகதிகள் தற்கொலை முயற்சி

கொழும்பு, நவ. 20

வியட்நாமில் அகதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களில் இருவர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கையைச் சேர்ந்த 303 பேர் சட்டவிரோதமாக கப்பல் மூலம் அகதிகளாகக் கனடா செல்ல முயன்றனர். அவ்வேளை இடைநடுவில் கப்பல் பழுதடைந்து உயிருக்குப்போராடிய நிலையில் நடுக்கடலில் தத்தளித்தனர். கடலில் தத்தளித்த இலங்கை அகதிகள் 303 பேரையும் ஜப்பானிய கடற்படை அதிகாரிகள் மீட்டு, வியட்நாமில் கரை சேர்த்தனர்.

அதனையடுத்து அகதிகள் 303 பேரும் வியட்நாமில் அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதன்பின்னர் அகதிகளாகச் சென்ற 303 பேரையும் நாட்டுக்குத் திரும்ப வரவழைப்பதற்கான முயற்சியை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்தது. அதற்கு இலங்கை அகதிகள் அனைவரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அகதிகள் 303 பேரையும் நாட்டுக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை வியட்நாம் அதிகாரிகள் மேற்கொண்ட நிலையில், மீண்டும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அகதிகள் இருவர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். அதனையடுத்து இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அதில் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,இ)



## யாழ். பொலிஸ் நிலையத்தில் பரிசோதனை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் வருடாந்த பொலிஸ் நிலையப் பரிசோதனை நிகழ்வு நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் என்.பி.லியனகே, யாழ்ப்பாண பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம் ஜரூல் ஆகியோர் பங்கேற்று பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது பொலிஸ் அணிவகுப்பு, வாகனப் பரிசோதனை, பொலிஸாருக்கான விசேட வகுப்பு உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை - பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் கீழ் நாடளாவிய ரீதியில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் பரிசோதனை நிகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-26)

## மோ.சைக்கிள் பந்தயம்; இரு இளைஞர்கள் சாவு!

கொழும்பு, நவ. 20

மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பண்டாரகம -களுத்துறை பிரதான வீதியின் மொரோந்துடுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நிகழ்ந்துள்ளது.

சில இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று மொரோந்துடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் 18 வயதுடைய வாதுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்த மொரோந்துடுவ பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,இ)

## சொந்த நிலங்களில் வாழும் தன்னாட்சி உரிமையே தமிழருருக்கான தீர்வு

### பொ. ஐங்கரநேசன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழர்களுக்குரிய அரசியல் தீர்வு அவர்கள் தங்களுடைய நிலங்களை ஆளுகின்ற தன்னாட்சி உரிமையேயாகும். தமிழர்களின் வளங்களை ஒருபுறம் ஆக்கிரமித்துக்கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக தென்னிலங்கையில் பல்கலைக்கழகம் நிறுவப்படுவது ஒருபோதும் தீர்வாக அமையாது எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

நல்லூர் கிட்டுப் பூங்காவில் 'கார்த்திகை வாசம்' மலர்க்கண்காட்சி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதிவரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை இந்த மலர்க்கண்காட்சி இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் நிகழ்வைஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழரின் கார்த்திகைப் பூ தமிழ் மக்களின் அடையாளம். சங்ககாலம் தொடக்கம் தற்போதய காலம் வரை எண்ணற்ற கவிஞர்கள் கார்த்திகை பூவினைப் பற்றி பாடியுள்ளார்கள். தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கும் உயிர்ப்புக்கும் கார்த்திகை மாத மரநடுகை உயிரூட்டும்.

காலநிலை உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலநிலை மாற்றத்துக்காக பல்கலைக்கழகம் அமைப்போம் எனத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகம் அமைப்பதானது வடலி வளர்த்து கள்ளு குடிக்கும் செயலாகும்.

இங்கே எங்களுடைய நிலங்களை கபளீகரம் செய்து கொண்டு பல்கலைக்கழகம் அமைப்போம் என்று சொல்வது எந்த வகையிலும் ஏற்புடையதாகாது.

அந்த மண்ணுக்குரிய மக்கள் அந்த இடத்தில் வாழ்வதே சுற்றுச்சூழல் பாதுகாப்பாகக் கருதமுடியும். ஆனால், அரசாங்கமோ எமது வளங்களை அபகரிப்பதிலேயே குறியாக இருக்கிறது.

தமிழர்களினுடைய அரசியல் தீர்வு என்பது அவர்கள் தங்களுடைய நிலங்களை ஆளுகின்ற தன்னாட்சி உரிமையாகும். அதுவே தமிழர் தீர்வாக அமையும் - என்றார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி நா.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக சமூகச் செயற்பாட்டாளர் ம.செல்வின் இரேனியஸ், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் ச.ரவி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)

## பாடசாலை உபகரணங்களுக்கு 2023 இன் பட்ஜெட் பொருந்தாது

*நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, நவ. 20

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட வரியானது, பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களுக்குப் பொருந்தாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்;

பாடசாலை உபகரணங்களின் விலைகள் மூன்று மடங்காக அதிகரித்தமை தொடர்பில் கடந்த சில தினங்களாக அதிகளவில் பேசப்பட்ட நிலையிலேயே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது - என்றார். (ஒ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்களை அபகரிக்கவே ஜனாதிபதி மன்னாருக்கு வருகை!

## மன்னார் மீனவ சங்கச் செயலாளர் சுட்டிக்காட்டு

**மன்னார், நவ. 20**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் வருகையில் இங்குள்ள மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கான எவ்வித திட்டமும் இல்லை. மாறாக இங்குள்ள வளங்களை எவ்வாறு அரசுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற நோக்கத்துடனே அவரது வருகை அமையவுள்ளது.**

இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளரும், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளருமான என்.எம்.ஆலம் தெரிவித்தார். மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்துக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தரவுள்ளார்.

இதன்போது மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரடியாக தெளிவுபடுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் வருகை, எரிபொருள் விலையேற்றம், எரிபொருள் சீராகக் கிடைக்காமை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களால் இங்குள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இவை குறித்து மீனவர்கள் யாரிடம் முறையிடுவது? மீனவர்களை சந்திக்க ஜனாதிபதி தயார் இல்லை.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடிய திட்டமிடலும் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் உள்ளடக்கப்படவில்லை. கடல் தொழில் சார்ந்த விடயங்களுக்கு எந்த முக்கியத்துவமும் வழங்கப்படவில்லை.

நன்னீர் மீன் வளர்ப்புக்கான திட்டங்களை உருவாக்கி அதற்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நடுக்குடா பகுதியில் உள்ள மீனவர்களை மாத்திரமே ஜனாதிபதி சந்திக்கவுள்ளார் என அறியமுடிகிறது. ஒருசாராரின் பிரச்சினைகளை மட்டும் கேட்டறிவது நியாயமில்லை.

மக்களின் பிரச்சினையை ஜனாதிபதி அறிந்துகொள்வதை விடுத்து மாவட்டத்தில் இருக்கும் வளங்களை எவ்வாறு அரசுக்கு ஏற்றவகையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடனே அவரது வருகை அமையவுள்ளது.

இதுதொடர்பில் மக்கள் பிரதிநிதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாராமுகமாகச் செயற்படுவது ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ச-213)

# யாழ். நகரப் பகுதிக் கடைகளில் சுகாதாரப் பிரிவு திடீர் பாய்ச்சல்!

யாழ்ப்பாணம், நவ.20

கொழும்புத்துறை, சுண்டுக்குளி பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களை திடீர் சுற்றிவளைப்புக்குட்படுத்தி சோதனை நடவடிக்கைகளில் யாழ். மாநகர சுகாதாரப் பிரிவினர் கடந்த புதன்கிழமை ஈடுபட்டனர். இதன்போது சுகாதாரம் மற்றும் காலாவதியான பொருள்கள் விற்பனை ஆகியவை குறித்து சோதனையிடப்பட்டன.

மேலும் மாநகர பிரதேசத்திலுள்ள சகல உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்களும் மாநகர சுகாதாரப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

உணவுகளைக் கையாளும் நடவடிக்கைகள் மற்றும் வியாபாரச் செயற்பாடு ஆகியவற்றில் யாழ். வர்த்தகர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் திடீர் சுற்றிவளைப்புகளின்போது சுகாதாரச் சீர்கேடு அவதானிக்கப்படின் உடன் சட்ட நடவடிக்கை பிரயோகிக்கப்படும் எனவும் சுகாதாரப் பிரிவினரால் இதன்போது அறிவுறுத்தப்பட்டது. (ச-17)



# சங்கானைப் பிரதேச விவசாயிகளுக்கு உரம்

யாழ்ப்பாணம், நவ. 20

சங்கானைப் பிரதேசத்துக்குட்பட்ட விவசாயிகளுக்கு உரவிநியோகம் தொல்புரம் கமநல சேவைகள் நிலையத்தில் கடந்த 3 நாள்களாக இடம்பெற்று வருகின்றது.

கடந்த காலங்களில் உரத்துக்கு நிலவிய தட்டுப்பாட்டையடுத்து விவசாயிகள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இந்த நிலையில் இந்த முறை 12 பரப்புக்குட்பட்ட விவசாய நிலத்தில் நெற்பயிர்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50 கிலோ உரம் இலவசமாக வழங்கப்படுகின்றது. அத்துடன் அவர்களுக்கு விற்பனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய கடந்த மூன்று நாள்களிலும் தொல்புரம் கமநல சேவைகள் பிரிவில் 431 விவசாயிகளுக்கு உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,125)

# சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

மாகாண மட்டப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட வரணி மத்திய கல்லூரியின் சாதனை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு தங்கம்மா கோவிந்தியின் நினைவாக அவரது பிள்ளைகளின் நிதிப் பங்களிப்பில் கல்லூரி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ஒ-14,159)

# மாதகல் சென்.ஜோசப் வித்தியில் போதைப்பொருள் ஒழிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய போதைப்பொருள் ஒழிப்புச் செயற்றிட்டம், மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பல்கலையில் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தில் வித்தியாலயத்தின் தரம் 10,11 மற்றும் உயர்தர மாணவர்கள் கலந்துகொண்டனர். (ஒ-14,125)



# வாசிப்பு மாத பரிசளிப்பு

சாவகச்சேரி, நவ. 20

சாவகச்சேரி பிரதேசசபையின் கச்சாய் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு, நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது சஞ்சிகை வெளியீடு இலவச அங்கத்துவம் வழங்கல், நூல் அன்பளிப்பு கலை நிகழ்வுகள், வாசிப்பு மாதப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான . பரிசில் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் அதிபர் யோ.ஜெயகாந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14, 159)

# சாவகச்சேரி பிரதேசசபை பட்ஜெட் மக்கள் பார்வைக்கு

சாவகச்சேரி, நவ. 20

சாவகச்சேரி பிரதேசசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டப் பட்டியல் பொதுமக்கள் பார்வைக்காக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையிலிருந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சபையின் வரவு-செலவுத்திட்டம் தொடர்பான விசேட அமர்வில் 2023 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு-செலவுத்திட்டம் சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் பொது மக்களின் பார்வைக்குக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வரவு -செலவுத் திட்டப் பட்டியலை சாவகச்சேரி பிரதேசசபை அலுவலகம் மற்றும் மீசாலை, நுணாவில், சாவகச்சேரி ஆகியவற்றின் பொது நூலகங்களில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பார்வையிடலாம் என்று தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார். (ஒ-14,9)



சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால், அண்மையில் பெய்த மழையின்போது பாதிக்கப்பட்ட சங்க அங்கத்தவர்கள் 101 பேருக்கும், பணியாளர்கள் 31 பேருக்கும் உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ஒ-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் எலும்பு முறிவு சத்திரசிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான உபகரணம் கொள்வனவு செய்வதற்கு, நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையால் 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபா மருத்துவமனைப் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தாவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (ஒ-14)

### மினுவாங்கொடையில் துப்பாக்கிச்சூடு:

## போதைப்பொருள் கடத்தல்காரரின் உதவியாளர்கள் இருவர் சாவு!

கொழும்பு, நவ. 20

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் களுடன் தொடர்புடைய கும்பலுக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் மினுவாங்கொடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கும்பலைச் சேர்ந்த இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

சம்பவத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவரும் காயங்களுக்குள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரும் வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பல் ஒன் றின் தலைவரும் பெருமளவில் போதைப்பொருளை கடத்துபவருமான ஊரகஹ இந்திக்கவின் பிரதான உதவியாளர்கள் எனவும் அவர்களிடமிருந்து ரி - 56 ரக துப்பாக்கி, போர - 12 துப்பாக்கி, ரம்போ ரக கத்தி ஆகியவை மீட்கப்பட்டன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ச-இ)


## விவசாயிகளின் நம்பிக்கையை வென்ற நிறைந்த அறுவடைக்கு ECO VITA திரவத்தன்மையிலான உரம்

கெங்காரா தனியார் நிறுவனத்தால் நம் நாட்டு இயற்கை பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்காக சந்தையில் விற்பனை செய்யப்படும் **ECO-VITA** திரவத்தன்மையுடைய உரமானது இதன்பொழுது, நாட்டில் பெரும்பாலான பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நம்பிக்கைக்குரிய உற்பத்தியாகிவிட்டது. நாட்டினுள் செயற்கை சார்ந்த உரப்பாவனையானது குறைவடைந்துள்ளதோடு சிறந்த ஆற்றல் மிக்க உரங்களுக்கான தீர்வொன்றாக விவசாயிகளின் கவனத்தை ஈர்த்துள்ள புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள **ECO-VITA** திரவத்தன்மை வாய்ந்த உரத்தினால், தற்காலத்தில் அதிகளவு மக்கள் நிறைந்த அறுவடையை அனுபவித்து வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகவுள்ளது.

செயற்திறனற்ற தீர்வுகளின்றிய உர முறைகளால் கடந்த காலத்தில் பயிர்ச்செய்கைக்கான விளைச்சல் 50% இல் குறைவடைந்ததோடு, நச்சுத்தன்மையற்ற சிறந்த விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்காக கரங்கொடுத்த இத்திரவத்தன்மையுடைய உரமானது 100% இயற்கை மூலப்பொருட்கள் உபயோகத்தால் தயாரிக்கப்பட்டது. மூலிகைகளின் சாறுகள், பழச்சாறுகள், மூலிகைகள் மற்றும் கால்நடைகளின் புரதம் மற்றும் கால்நடைகளின் எலும்புப் பகுதிகள் போன்றன இத்திரவத்தன்மை வாய்ந்த உரத்தினை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட இயற்கை மூலப்பொருட்களாவதோடு, இவ் உர தயாரிப்பானது துர்நாற்றமற்றது. ஆகையால் பயிர்ச்செய்கை பற்றியும் விளைச்சல் பற்றியும் எவ்வித அச்சமுமின்றி இத்திரவத்தன்மையுடைய உரத்தினை உபயோகிக்கலாம்.

தற்காலத்தில் நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் இவ் **ECO-VITA** உரத்தினை உபயோகித்து அதன் மும்மடங்கு செயற்பாட்டினை விவசாயிகள் மிகத்தெளிவாக உறுதிபடுத்தியுள்ளனர். அவர்களது பயிர்ச்செய்கையின் முக்கியமான மூன்று கட்டங்களில் இத்திரவத்தன்மையுடைய உரத்தினை நம்பிக்கையுடன் உபயோகித்திருந்தமைக்கு அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக காணப்பட்டது. இதன் மூலம் பயிரிலேயே அதனை பாதிக்கும் வண்டுகள் மற்றும் பூச்சிகளிடமிருந்து பயிர்ச்செய்கையை பாதுகாப்பதோடு, பூப்பூக்கும் கட்டத்தில் அதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வண்டுகளிடமிருந்தும் பயிர்ச்செய்கையை பாதுகாத்திடும். அத்துடன், இத்திரவத்தன்மை வாய்ந்த உரத்திற்கு. இயற்கையான பூச்சிக்கொள்ளிகளின் பதார்த்தம் உள்ளடக்கப்பட்டுள்ளதால் சிறு பூச்சிகள் பயிர்ச்செய்கையிலிருந்து விலகிவிடும்.

இதன் காரணத்தால் பூக்கள் காயாகி நிறைந்த விளைச்சலைப் பெற்றுக்கொடுக்கும். **ECO-VITA** இல் உள்ளடக்கப்பட்டுள்ள போசனைப் பதார்த்தங்கள், அவ்வாறே விளைச்சலை 30-40% வரையில் அதிகரித்திட வழிகோலிடும்.

**ECO-VITA** திரவத்தன்மை வாய்ந்த உரத்தினை இரசாயன உரத்துடன் உபயோகித்திடும் போது வெற்றிகரமான பிரதிபலனை அனுபவித்திட முடியுமென இதன்போதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களுக்கு முன்பு நுவரெலியா மாவட்டத்தில் இத்திரவத்தன்மை வாய்ந்த உரத்தினை, இரசாயன உரத்துடன் பயன்படுத்தியதால் அதில் விளைச்சல் இருமடங்காக அதிகரித்திருந்ததாக நுவரெலிய மாவட்ட செயலாளர் அலுவலகத்தால் மேற்கொண்ட ஆய்வின் போது அறியக்கிடைத்தது.

இவ்வாறு, இலங்கை விவசாய பொருளாதாரத்தை நிமிரச் செய்து விவசாயிகளின் நம்பிக்கையை வென்றுள்ள **ECO-VITA** திரவத்தன்மையுடைய உரத்தினால் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக்கி விளைச்சலை அதிமாக்கிடுமாறு, கெங்காரா ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம் விவசாயிகளுக்கு அழைப்பினை விடுக்கின்றது.




"விவசாய திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள இக்கொவிட்டா இயற்கை திரவத்தன்மையுடைய உரமாகும்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எமக்கான அரசியல் எது?

இந்தியா மீதும் தமிழகத் தலைவர்கள் மீதும் கரித்துக் கொட்டுவதை முதலில் தமிழ்த் தேசியத் தலைவர்கள் நிறுத்தவேண்டும். இந்தியா என்பது ஒரு தனிநாடு. அந்த நாடு தன் பிராந்திய நலன்களைக் கருத்திற்கொண்டுதான் செயற்படும். இந்தியா எமக்காக வரக்கூடிய தொடுவானம் எதுவென்பதை தமிழ்த் தலைவர்கள் தெளிவாகப் புரிந்துவைத்திருக்கவேண்டும் இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன். 1940களில் தமிழ்த் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட 50:50 கோரிக்கை, அதன் பின்னர் இந்திய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை உதாசீனம் செய்தமை என்பன தமிழ்த் தலைவர்கள் செய்த வரலாற்றுத் தவறு என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார் அவர்.

ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியத் தலைவர்களின் தற்போதைய – கடந்தகால நிலைப்பாடுகளின் மீது தனக்கிருக்கும் அதிருப்தியை மனோ கணேசன் பட்டவர்த்தனமாக விமர்சிப்பது இதுவொன்றும் முதல் முறையல்ல. இலங்கையில் உள்ள மூத்த தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவர் என்பதை விடவும் 'இந்தியப் பூர்வீகம்கொண்ட' மலையக மக்களின் பிரதிநிதி என்று மனோ கணேசனை விளிப்பதுதான் சாலப்பொருத்தமானது. இதனால், இந்தியத்தளம் சார்ந்த சிந்தனை பல்வேறு விடயங்களில் மனோ கணேசனிடம் இருந்தே வந்திருக்கின்றது. அதற்காக 'இந்தியத் தளம்சார் சிந்தனையுடையவர்தானே' என்ற ஒற்றை நிலைப்பாட்டின் கீழ் மனோ கணேசனின் கருத்துக்களைப் புறமொதுக்கிவிடவும் முடியாது. அவர் வெளிப்படுத்திய கருத்துக்களில் இந்திய அபிமானம் வெளிப்படையாகத் தெரிந்தாலும், அதிலும் சில உண்மைகள் இருக்கவே செய்கின்றன. குறிப்பாக இந்தியாவால் பாதிக்கப்பட்டதை விடவும் தமிழ் அரசியல்வாதிகளாலேயே தமிழினத்தின் பிரச்சினைகள் மோசமாகி, தீர்க்க முடியாமல் திண்டாட வேண்டியிருக்கின்றது என்ற சாரப்பட மனோ கணேசன் சொல்லியிருப்பதில் எள்ளளவும் தவறில்லைத்தான்.

ஆனால், தமிழ்த் தேசியத் தலைவர்கள் தற்போதாவது தங்களின் வரலாற்றுத் தவறுகளை சுயபரிசீலனை செய்திருக்கின்றார்களா? ஒரு பொதுவான நிறுவன மயப்படுத்தலின் கீழ் தமிழர்களுக்கான அரசியல் தீர்வைத் தேடிப் பயணப்பட ஆரம்பித்திருக்கின்றார்களா? என்றால், அதற்குரிய பதில் பல்லிளிக்கும். இவ்வாறானதொரு பிறழ்வான– கருத்தொற்றுமையில்லாத அரசியலால் நாம் எதைத்தான் சாதித்துவிட முடியும்? சுதந்திர தினத்துக்குள் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படும் (?) என்று அண்மையில் தெரிவித்திருந்தார் ஜனாதிபதி ரணில். இதையடுத்து, தமிழர்களுக்கான தீர்வு எந்தத் தளத்தில் – எந்த மட்டத்தில் இருக்கவேண்டும் என்பதை ஓரணியில் வலியுறுத்துவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டமைப்பின் தலைவருடைய இல்லத்தில் சந்தித்துக் கதைப்பதற்குத் திட்டமிடப்பட்டது. குறைந்தபட்சம் இந்தச் சந்திப்பையாவது தமிழ்த் தேசிய அரசியல் ஜாம்பவான்களால் மேற்கொள்ள முடிந்ததா? கட்சிகளின் வரவின்மையால் கூட்டம் கைவிடப்பட்டதுதான் மிச்சம்.

தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் பலவீனங்களை கொழும்போ – சர்வதேசமோ நாடிபிடித்துப் பார்க்கத் தேவையில்லை. அவை காலத்துக்குக்காலம் குடுமிபிடிச் சண்டைகள் மூலம் வலுவாகவே வெளித்தெரியவரும். இவ்வாறான நிலையில் இந்தியாவும் சர்வதேசமும் தமிழ்த் தேசியக் கட்சிகள் மீதுள்ள எந்த நம்பிக்கையில் அதீத தலையீட்டை ஈழத்தமிழர் விடயத்தில் காட்ட முயலும்? என்ற கேள்வி இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

உலகெங்கும் சிதறிவாழ்ந்த யூதர்கள் தமக்கென தனி நாடொன்றை உருவாக்குவதற்கு முதலாவதும் முக்கியமானதுமான காரணம் அவர்களின் அரசியல் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தது. யூதர்கள் நாட்டுக்குநாடு சிதறியிருந்தார்களே தவிர அவர்களின் அரசியல் சோரம்போகவில்லை. அந்த அரசியல் கற்பாறையின் மேலுள்ள எழுத்தைப்போன்று அசையாதிருந்தது. ஆனால், ஈழத் தமிழர்கள் இந்த விடயத்தில் சபிக்கப்பட்டவர்கள். எங்களின் அரசியல் இன்னமும் பொதுமைப்படவில்லை, நிறுவனமயமாகவில்லை. குறைந்தபட்ச அரசியல் இலட்சணங்களே இல்லாமல் இந்தியாவை சர்வதேசத்தையும் நோவதால் [illegible] பயனுமில்லை. எமக்கான அரசியலை நாம்தான் பே[illegible]டும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இலலை" – **சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)**






# உள்ளூராட்சித் தேர்தல்: வியூகம் வகுக்கும் பஸில்



**கொழும்பு, நவ. 20**

**சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உயர் மட்ட கூட்டமொன்றுக்கு அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.**

உள்ளூராட்சிசபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான வியூகங்களை வகுப்பது சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள், உள்ளூராட்சிமன்றங்களின் பிரதானிகள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்புரிமையை துறந்த பின்னர் அமெரிக்கா பறந்த பஸில் ராஜபக்ச, இன்று நாடு திரும்புகிறார்.

முதற்கட்டமாக மொட்டு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பாதீடு குறித்து பேச்சு நடத்துவார். அதன்பின்னர் ஏனைய சந்திப்புகள் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, வரவு - செலவுத் திட்டத்துக்கு பின்னர் மொட்டுக் கட்சி உறுப்பினர்களுக்கு 10 அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன.

(ஒ-44)

# ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பொருத்தமானவர்!

### பெரமுன எம்.பி. சான்றிதழ்



கொழும்பு, நவ. 20

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களமிறங்குவதற்கு சஜித் பிரேமதாஸவே தகுதியுடையவர் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி நேற்றுத் தெரிவித்தார்.

'டலஸ் அழகப்பெரும உட்பட எதிரணியில் உள்ள பலரும் கொள்கை அடிப்படையில் எதிர்காலத்தில் ஒன்றிணைவார்கள், அதற்கான சாத்தியம் உள்ளது. கூட்டணியொன்றை அமைப்பதே எமது இலக்கு. தேர்தல் அறிவிக்கப்பட்டதும் சின்னம் உள்ளிட்ட விவரங்கள் அறிவிக்கப்படும்' எனவும் சந்திம வீரக்கொடி குறிப்பிட்டார்.

(ஒ-44)

**நாளை** | **21.11.2022** திங்கட்கிழமை கார்த்திகை 05 | சுபநேரம் : 12.10 - 01.40 ராகுகாலம்: 07.40 - 09.10

**பிரதோஷ விரதம்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மந்தபோசணைக் குறைபாட்டுடன் துணுக்காயில் 238 குடும்பங்கள்

## பொருளாதார மறுமலர்ச்சி மையங்களூடாக நடவடிக்கை முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, நவ. 20**
**துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களில் பொருளாதார ரீதியில் மிகவும் நலிவுற்ற குடும்பங்களுக்கு பொருளாதார மறுமலர்ச்சி மையங்கள் ஊடாக உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்தார்.**

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான ஒருங்கிணைந்த பொறிமுறையின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசின் கொள்கைக்கமைய மாவட்ட ரீதியாக பொருளாதார மறுமலர்ச்சி மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. துணுக்காய் பிரதேசத்தில் 3 இடங்களிலுள்ள மறுமலர்ச்சி மையங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களுடன் கலந்துரையாடப்பட்டது.
இதன்போது துணுக்காய் பிரதேசத்தில் பொருளாதாரம் நலிவடைந்த நிலையில் 238 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 5 வயதுக்குட்பட்ட 100 சிறுவர்களும் கர்ப்பிணித் தாய்மார்கள் 39 பேரும் மந்தபோசணைக்குட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.
அவர்களுக்கான போசாக்கு ஏற்பாடுகளையும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் பொருளாதார மறுமலர்ச்சி மையங்கள் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-19)



யாழ்ப்பாணம் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தால் பதிவாளர் நாயகம் பிரபாத் அபேவர்த்தன, யாழ்.மாவட்டச்செயலர் க.மகேசன், அகில இலங்கைப் பதிவாளர் சங்கத் தலைவர் துஷ்மந்த கருணநாயக்க ஆகியோர் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-14)

# ஓட்டிசம் சிகிச்சை நிலையத்தை மூடுவதற்கு இடமளியேன் !

## *நிரந்தரக் கட்டடம் விரைவில்: வடக்கு மாகாண ஆளுநர் உறுதி*

யாழ்ப்பாணம், நவ. 20
யாழ். திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள, ஓட்டிசம் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சையுடன் கூடிய பயிற்சி நிலையத்தை எந்தக் காரணம் கொண்டும் மூடுவதற்கு இடமளிக்கமாட்டேன் என வடக்கு மாகாண ஆளுநர் உறுதியளித்துள்ளார்.
பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்படவுள்ளதாக அங்கு சிகிச்சை பெற்றுவரும் பிள்ளைகளின் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.
இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட ஆளுநர் சிகிச்சை நிலையம் வடமாகாண சுகாதார அமைச்சின் ஆளுகைக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றது.
அதனடிப்படையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், குழு ஒன்றை அமைத்து அதனை சரியான முறையில் நடத்திச் செல்வதற்குரிய பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.
அதனையடுத்து கடந்த காலத்தில் குறித்த நிலையத்தில் இடம்பெற்ற முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் வெளிவந்துவிடும் என நிலையம் மூடப்படவுள்ளது என வீண்வதந்திகளை பரப்பியுள்ளனர்.
இந்தச் சிகிச்சை நிலையம் மூடப்படுவதற்கு இடமளிக்க மாட்டேன். வடக்கு மாகாணத்தை மையப்படுத்தி ஓட்டிசம் பயிற்சி நிலையத்தை நிரந்தரக் கட்டடத்தில் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். (ச-27)

# தென்மராட்சி தெற்கு வயல்களில் அமோக விளைச்சல் கிடைக்கும்

## *கமக்கார அமைப்புகள் எதிர்வுகூறல்*

சாவகச்சேரி, நவ. 20
தென்மராட்சி தெற்கு நெல்வயல்களில் இந்த வருடம் அதிக விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது என கமக்கார அமைப்புகள் எதிர்வுகூறியுள்ளன.
கடந்த வருடம் உரவகைகள் கிடைக்காமையால் 70 வீதமே நெல் விளைச்சல் கிடைத்தது.
இந்த வருடம் வடக்கு மாகாண ஆளுநரின் முயற்சியில் கமநலசேவைகள் உதவி ஆணையாளர், கைதடி கமநல சேவைகள் நிலையத்தினர் ஆகியோரின் பங்களிப்பில் மூன்று கட்டமாக யூரியா உரம் உரிய காலத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
இந்த வருடத்தின் ஆரம்பத்தில் மழை வெள்ளம் காரணமாக அழிந்த நெற் பயிர்களை விடுத்து தற்போது ஏனைய வயல்களில் அமோக விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது என கமக்கார அமைப்புகள் மேலும் தெரிவித்தன. (ச-9)

# மன்னார் மருத்துவமனைக்கு மடிக்கணினி கையளிப்பு

மன்னார், நவ. 20
மன்னார் பொது மருத்துவமனைக்கு மடிக்கணனி ஒன்று கொழும்பு தெற்கு றோட்டரிக் கழகத்தின் நிதியுதவியில் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.
மருத்துவமனையால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாக கொழும்பு தெற்கு றோட்டரிக் கழக அங்கத்தவர்கள் மற்றும் மன்னார் றோட்டரிக் கழக அங்கத்தவர்கள் கலந்துகொண்டு மடிக்கணினியை மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளித்தனர். அத்துடன் 5 தொற்றுநீக்கித்திரவப் பெட்டிகளும் றோட்டரிக் கழகத்தால் வழங்கப்பட்டன. (ஒ-14,60)



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக் கூடும். பொறுமை அவசியம்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. செலவு செய்யவேண்டியிருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல்ஆரோக்கியத்தில்கவனம்தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். பிணக்குகள் நீங்கி சந்தோசம் அதிகரிக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்திகளை இணையத்தில் விளம்பரப்படுத்த நடவடிக்கை!

## மகளிர் விவகாரம் தொழிற்றுறை அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ. 20**

**பெண் தொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் முகமாக அவர்களின் உற்பத்திப் பொருள்களை மக்களுக்கு தொழில்நுட்ப ரீதியில் இணையத்தில் காட்சிப்படுத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மகளிர் விவகாரம் தொழிற்றுறை சமூக சேவைகள் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண ஆளுநரின் வழிகாட்டலின் கீழ் தொழிற்றுறை திணைக்களத்தால் மாதாந்த மகளிர் சந்தை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கைத்தொழில் திணைக்களமும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சும் இணைந்து பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களின் பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர்களின் தொழில் தரத்தை உயர்த்துவதற்கு முதற்கட்டமாக தொழில்நுட்ப ரீதியாக வலைத்தளங்களில் அவர்களது உற்பத்திப் பொருள்களை விளம்பரப்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான சந்தை வாய்ப்பை அதிகளவில் பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

கைத்தொழில் தொழிற்றுறை திணைக்களம், கிராம அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம் ஆகியவை இணைந்து இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளன - என்றார். (ச-27)



இளவயதுத் திருமணத்தைத் தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வு, தென்மராட்சிப் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு அலகினரால் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மற்றும் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ஒ-14,9)



வட்டுக்கோட்டை மூளாய் வீதி ஐக்கிய நாணய சங்கத்தின் 90 ஆவது பொதுக்கூட்டத்தில், கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-14)



## பொலிஸ் நிலைய பரிசோதனை நிகழ்வு

சாவகச்சேரி, நவ. 20

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பரிசோதனை நிகழ்வு, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்ன தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் என்.பி.லியனகே, கோப்பாய் மற்றும் சாவகச்சேரி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம் தருள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-14,159)

## வலுவூட்டல் திட்டத்தின் கீழான மிகுதிக் கொடுப்பனவு வழங்கல்

சாவகச்சேரி, நவ. 20

சமுர்த்தித் திணைக்களத்தின் வலுவூட்டல் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு இதுவரை மிகுதிக் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாத பயனாளிகளின் ஒரு தொகுதியினருக்கான கொடுப்பனவு, சமுர்த்தித் திணைக்களத்தால் பிரதேசசெயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வலுவூட்டல் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கிய போதிலும் அவற்றின் மிகுதித்தொகை வழங்கப்படாமல் இருந்தது. கடந்த மாதம் ஒரு தொகை நிதியும் அண்மையில் மேலும் ஒரு தொகை நிதியும் திணைக்களத்தால் பிரதேசசெயலகத் துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உதவிப் பொருள்களை பெற்று இதுவரை மிகுதிக் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளாத பயனாளர்கள் தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் வலுவூட்டல் திட்டத்தில் 142 வேலைத் திட்டங்களுக்கு 886 பேர் தெரிவு செய்யப்பட்டு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட பொருள்களின் மிகுதிக் கொடுப்பனவுத் தொகை பயனாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14,9)

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

தேசிய கல்வி நிறுவகத்தால் அச்சிடப்பட்ட புத்தகக் கண்காட்சியும், புத்தக விற்பனையும் யாழ்.மத்திய கல்லூரி றொமைன் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கண்காட்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டு புத்தகங்களைப் பார்வையிட்டதுடன் புத்தகங்களைப் பெற்றுச்சென்றனர்.

தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும்.

அத்துடன் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள புத்தகங்கள் 20 வீத விலைக்கழிவுடன் விற்பனை செய்யப்படவுள்ளன. (ஒ-14,27)

# திசைமாறிச் செல்லும் இளையோரை வளர்த்தெடுக்க கண்டிப்பு அவசியம்

## வரதீஸ்வரன் சுட்டிக்காட்டு

மன்னார், நவ. 20

தற்போது திசைமாறிச் செல்லும் இளையோரை நன்றாக வளர்த்தெடுக்க பெற்றோரின் கண்டிப்பு மிக அவசியம் என்று வடமாகாண பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகமும் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில் அண்மையில் நடத்திய "மன்னெழில் 11' மலர் வெளியீடும் 2022 ஆம் ஆண்டுக்கான கலைஞர் மற்றும் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளம் சமூகம் தற்போது திசைமாறிச் சென்று கொண்டிருக்கின்றது. அவர்களை ஒன்றிணைத்து நல்ல பண்பாட்டிலும் ஆன்மீகத்திலும் ஈடுபாடு கொண்டவர்களாக வளர்த்தெடுக்க நாம் முனைய வேண்டும். பிள்ளைகள் குற்றம் செய்தால் தண்டிக்காது கண்டித்து வளர்க்க வேண்டும்.

சில பெற்றோர் மார்தட்டிச் சொல்லுவார்கள் நான் எனது பிள்ளையை ஒருநாளும் ஏசவோ கண்டிக்கவோ மாட்டேன் என்று. ஆனால் இது பெரும் தவறு.

அந்தக் காலத்தில் நாங்கள் குற்றம் செய்தால் தண்டிக்கப்படுவோம். அடி வாங்குவோம். ஆனால் இந்த நிலை இப்பொழுது இல்லை.

பிள்ளைகளுக்கு யாராவது நல்ல பழக்க வழக்கங்களை சொல்லிக்கொடுக்க வேண்டும். ஏனெனில் ஒரு பிள்ளை தானாக அதை பழகிக் கொள்ளாது.

இதனால் தான் இன்றைய பிள்ளைகள் தவறான வழிகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

பிள்ளைகள் பெரியவர்களாக வளர்ந்து விட்டால் நாம் அவர்களை நல்ல பண்பாட்டுக்கு வளர்த்தெடுப்பது கடினமாகி விடும். எனவே திசைமாறிச் செல்லும் எமது இளைஞர்கள் அனைவரையும் ஒன்றிணையுங்கள். அவர்களை வளர்த்தெடுக்க கண்டியுங்கள். அவர்களைக் கலைஞர்களாக உருவாக்குங்கள்- என்றார். (ஒ-14,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 01 . 1936



மறைவு 19 . 11 . 2022

## திருமதி நடராசா செல்வமணி

இணுவில் மஞ்சத்தடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா செல்வமணி அவர்கள் நேற்று (19.11.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், இராசா, ஞானேஸ்வரி, அன்னம்மா மற்றும் தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரவீந்திரன் (கனடா), யோகேந்திரன் (கனடா), ஆறுமுகதாஸ் (யாழ்.பல்கலைக்கழகம்), திருக்குமார் (கனடா), சிவகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீரஜனி, சந்திரகுமாரி, நிமலாதேவி, ஸ்ரீரஞ்சனி, சிவரூபி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிரா, பாபிரா, பிரவீன், உபாசன், சிமித்தி, சிவப்பிரியன், தெய்விகா, அருட்சிகா, விநோத், விவிசன், வருண், டக்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2022) மு.ப. 11.30 மணியளவில் மஞ்சத்தடி இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் .

மஞ்சத்தடி, இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 21919) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 08 . 1949



மறைவு 17 . 11 . 2022

## திருமதி வயிரமுத்து புவனேஸ்வரி

யாழ். கொடிகாமம் மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து புவனேஸ்வரி அவர்கள் கடந்த (17.11.2022) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஐயாத்தம்பி வள்ளிமுத்து தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சிதம்பரம் (நுணாவில்) தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வயிரமுத்து (நீர்பாசன திணைக்களம்-ஒட்டுசுட்டான்) அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பலதா(லதா- லண்டன்), புஸ்பராஜன் (ராஜன்- லண்டன்), புஸ்பறஜனி(றஜனி- பிரான்ஸ்), புஸ்பகாந்தன்(காந்தன்- காந்தன் ரவல்ஸ், குகன் ரவல்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற யசோதரன் (அசோகன்- லண்டன்), நிரோஷா (லண்டன்), குகதாசன் (லீற்றன்- பிரான்ஸ்), சுபத்திரா (ஆசிரியை- கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், யோகேஸ்வரி (ஆசிரியை- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) செல்வராசா (செல்வா- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகம்மா, சிவபாக்கியம், இரத்தினமலர், மலர்மணி (பிரான்ஸ்), தங்கேஸ்வரன், குகனேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, ஞானேஸ்வரன்(காந்தி), சுப்புலச்சுமி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரிதா, யதுன், அனிஷா, அங்கிதா(லண்டன்), யாதவி, கனிஷ்கா(பிரான்ஸ்), ஆருசன், ஆருஸ்கா(கொடிகாமம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (21.11.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் மீசாலை வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் வேம்பிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 21922) 1/6 077 371 5959 தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## செல்வன்

## ஜெறிபின் ஜெகநாதர் சாள்ஸ் வினோத்



**மண்ணில்: 13.05.1999 விண்ணில்:17.11.2022**

கொல்லர் புளியங்குளம் மாங்குளத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் ஜெறிபின் ஜெகநாதர் சாள்ஸ் வினோத் கடந்த (17.11.2022) அன்று அகால மரணமானார்.

அன்னார் ஜெறிபின் ஜெகநாதர், மேரி பற்றிமா ஜெசிக்கா ஆகியோரின் அன்பு மகனும், சாம் அன்ரனி (U.S Hotel ஊழியர்), நிறோஸ் கிளிங்ரன் (மாணவன் ATI- Jaffna) அன்று பிரகாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ம.ஆரோக்கியநாதர் (பொலிற்), மேரி இமல்டா (இராணி), அ.சூசைப்பிள்ளை, எட்வீசம்மா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற றொபின் சில்லைநாதர், அரிபின் அருள்நாதர், அருள்பின் அகிலநாதர், யோதினி, யூடிற் சுபாசினி ஆகியோரின் பெறாமகனும், ஜெனிற்ரா சற்குணராணி, எட்மன் வரதராஜா, பற்றிக் ஜெயராஜ் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொல்லர் புளியங்குளம், மாங்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சில்லாலையிலுள்ள "ஜெனிற்றா வாசா" இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும். நாளை (21.11.2022) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கதிரை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 21918) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 06 . 1955



இறப்பு 18 . 11 . 2022

## திருமதி இராஜபிரேமா மரியநாயகம்

**( ஓய்வு பெற்ற ஆசிரியை யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (பழைய மாணவி)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்துவந்தவருமான திருமதி இராஜபிரேமா மரியநாயகம் கடந்த (18.11.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் திரு.யோசேப் மரியநாயகம் (ஓய்வு பெற்ற சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், பூரணி ( சட்டத்தரணி) அவர்களின் ஆருயிர் அன்னையும், Dr.போல் பிரைற் (Lady Ridgeway Hospital, Colombo) அவர்களின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற கியூபேட் இராஜதுரை மற்றும் ரோசலின் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கியூபேட் ஆனந்தராஜன் (கிராமசேவகர்) அவர்களின் பாசமிகு அக்காவும், காலஞ்சென்ற செபமாலை, எலிசபெத் இன் மருமகளும், யதுசன், யதுசினி நிருசினி அவர்களின் அன்பு அத்தையும், காலஞ்சென்ற லூர்த்து பாலநாயகி, பேரின்பநாயகம் (கனடா), பற்றிமா ராசநாயகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி 21.11.2022 அன்று யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் காலை 10.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இதனை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**Tele:077 493 8304, 077 925 8008** **குடும்பத்தினர்.**

(CS 21924)1-6

# ஆதனப் பெயர்மாற்றம்

இல 11. 6ம் குறுக்குத் தெரு. குருநகர். யாழ்ப்பாணம் என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட 02 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதனம் யாழ்ப்பாணம் மாநகரசபையின் வரிமதிப்பீட்டு புத்தகத்தில் A.முடியப்பு பெண் அன்னம்மாவும் யோண் பெண் றெபேக்காவும் என்ற பெயரில் காணப்படுகிறது.

இவ்வாதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு யூல் பிலைன் அன்ரன் றஞ்சித்குமார் முகதாவில் 01.09.2021ஆம் திகதிய 400 இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உரித்துப் பிரகடன உறுதி மூலம் லூயிஸ் அன்ரனி. பீற்றர் வில்சன் பெண் அன்னம்மா. லூயிஸ் பீற்றர் வில்சன். கொஸ்மஸ் நித்தியராஜன். ஜீவதாசன் பெண் ஜறின் றசிந்தா செபமாலை ஜீவதாசன். இராஜசேகரம் கைம்பெண் மேரி கவிதா. கொஸ்மஸ் செல்வராசன். கொஸ்மஸ் ஜெகதீஸ்வரன். கொஸ்மஸ் டொனால் சரத். கொஸ்மஸ் கட்சன் கொன்சன்ரையின். றொசாறியன் ஜெறினோல்ட் கைம்பெண் றெஜி யூலியானா. எட்வேட் அன்பழகன் றொமெல். எட்வேட் அன்பழகன் மகள் மிதுலா. அன்ரன் குமாரகுலசிங்கம். மொஹமட் பாரூஹ் பாத்திமா சாமிலா. பிறேமலவன் மேரி கொன்ரசன்ரா. கிறிஸ்ரியன் ஷிவாந்தன். பிரான்சிஸ் சேவியர் பெண் றோகினி. குணதாஸ் பிரான்சிஸ் சேவியர். அன்ரனி பேணாட் பெண் டொறின். கிறிஸ்ரியன் பிரியாந்தன். கிறிஸ்ரியன் மகள் அருள்நிசா. வலோரி அன்ரன். வலோரி சகாயநாயகி. ஜெறாட் பெண் டல்சியா. கொன்ஸ்ரன்ராயின் பெண் லூர்த்துநாயகி. அல்போன்ஸ் கொன்ஸ்ரன்ராயின். சவிரியான் கிறிஸ்ரியன் பேனாட். சவிரியாம்பிள்ளை சகாயநாதன். யூட்றொபேட் வில்லியம் பெண் லக்ஸ்மாலா. சவிரியான் யூட்றொபேட் வில்லியம். கிறிஸ்துராசா பெண் வசந்தரூபினி. அடைக்கலம் கிறிஸ்துராசா. சொவஹீனஸ் பெண் சந்தலூசியா. தேவதாஸ் ஜாக்ஸன் சொவஹீனஸ். அருள்தாஸ் அனுராஜன். அருள்தாஸ் மகள் நிவேதிகா. யேசுராசா பத்மராஜா. றொபின்சன் குரூஸ் பெண் கிளவ்டியா. சின்னப்பு றொபின்சன் குரூஸ். யேசுராசா ஆராக்கியராஜா. யேசுராசா அன்ரனிபேனாட். யேசுராசா றோச்சேஸ். இராஜசேகரன் கௌதரன். இராஜசேகரன் மகள் மேரிபிரான்சியா. இராஜசேகரம் மகள் மேரிசுஜிதா. இராஜசேகரன் மகள் மேரிதர்சிகா ஆகியோர் வெளிப்படுத்தி பிரகடனப்படுத்தியுள்ளனர்.

பின்னர் பிரசித்த நொத்தாரிசு தனபாலன் லாவண்யா முகதாவில் 68 இலக்க 23.10.2021 திகதிய அறுதி உறுதி மூலம் மேற்கூறியவர்களால் இல.11. 6ம் குறுக்குத்தெரு. குருநகரைச் சேர்ந்த யோண் கென்றி நியூமன் யோகநாயகி அவர்களுக்கு அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைத்தனர்.

**ஆதன விபரம்:**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி. சுண்டிக்குளிக் கோவிற்பற்று. கரையூர் இறை. யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2. வரி மதிப்பீட்டு இலக்கம் 11. "குடியிருப்பு வளவு" பேட்சஸ் பதினொன்று (11) நில.பர.ஒன்று (01). இதில் சொரியலாக அரைப்பங்கு. ஆனால் இது எமது நிந்தமான ஆட்சிப்படியும். உத்தரவு பெற்ற நில அளவையாளர் க.கனகசபை அவர்களால் 20.12.2020 அன்று அளந்து வரைந்தளித்த 8109ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளவாறு. அளந்து கண்டதன்படியும் நில. பர சைபர் (00) குளி பதினொன்று தசம் எட்டு இரண்டு (11.82). **இதன் எல்லைகள் (குறித்த படத்தின்படி)**

**கிழக்கு** : 6ம் குறுக்கு வீதி
**வடக்கு** : ஜெயநாயகம் பவாவின் ஆதனம்.
**மேற்கு** : அ.வைத்தியம்மா மற்றும் T.S. மைக்கல் பெண் மரியம்மாவின் ஆதனம்
**தெற்கு** : R.ராம்கியின் ஆதனம்.

இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது குறித்த ஆதனத்தை யோண் கென்றி நியூமன் யோகநாயகி தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு முழுமையாகவோ / பகுதியாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது யோகநாயகி யோண் கென்றி நியூமன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr.38610)(2.6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 - 05 - 1949



மறைவு 21 - 10 - 2022

**கடந்த 21.10.2022 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்**

## அமரர் திரு. கெங்காதரம்பிள்ளை தனபாலன்

**(ஓய்வு பெற்ற ஆசிரியர் – அப்பு மாஸ்ரர்)**

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நேற்று (19.11.2022) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்க்கக்கரையில் இடைபெற்றதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நுணாவில் மத்தி சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் அந்நிகழ்வில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக மனமுவர்ந்து ஏற்றுக்கொள்ளவும்)**

மேலும் அன்னாரின் மரணச் செய்தயறிந்து நேரிலும் தொலைபேசியினூடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு, உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும், பதாகைகள், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், இன்று வரை எமக்கு பல வழிகளில் உதவி புரிந்த நல் உள்ளங்களுக்கும் அன்னாரின் நினைவு மலருக்கு அனுதாபச் செய்திகள் வழங்கிய நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**கத்தாப்பாடி வீதி,**
**நுணாவில் மத்தி, சாவகச்சேரி.** (CS 21830) (3/6) **குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## சங்கீத வித்துவான் A.K. கருணாகரன்

கரவெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பு நாரஹென்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சங்கீத வித்துவான் திரு. A. K. கருணாகரன் அவர்கள் நேற்று (19.11.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தவனம் இராசம்மா ஆகியோரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இராசரத்தினம்(சி.ப) சின்னத்தங்கம் ஆகியோரின் பாசமிகு மருமகனும், திருமதி வசந்தகுமாரியின் அன்புக் கணவரும், சித்திராம்பிரி, திருமதி சுவர்ணாங்கி சுகர்தன் (ஆசிரியை.கொ/கணபதி மகளிர் வித்தியாலயம்), சியாமளாங்கி (விரிவுரையாளர், விபுலானந்த இசைக்கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகம்), திருமதி தேனுகா இராஜேஷ்குமார் (ஆசிரியை, கொழும்பு மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற திருமதி இராஜேஷ்வரி வேதாரணியம், திருமதி இரத்தினேஸ்வரி சின்னப்பு ஆகியோரின் அன்புச் சகோதரனும், சி. இரத்தினகுமாரி (இலண்டன்), ஜெ.ஜெயகுமாரி, இ.வசந்தராஜன் (மேற்பார்வையாளர், யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனரும், க.சுகர்தன் (கணினிப் பொறியியலாளர் IFS கொழும்பு), இ. இராஜேஷ்குமார் ( இந்தியா) ஆகியோரின் மாமனாரும் அருண், சஞ்சய் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2022) திங்கட்கிழமை பி ப 2. 00 மணிக்கு அன்னாரது இல்லமான "இராஜஸ்தான்" கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் நடைபெற்று பூதவுடல் வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரியப்படுத்துகின்றோம்.

**"இராஜஸ்தான்"**
**கரணவாய் கிழக்கு,**
**கரவெட்டி.** (cr.38622) (2.6)

**தகவல்:**
**இராசரத்தினம் வசந்தராஜன்**
**(மைத்துனன் - 077 673 3756)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரகர் தேவை

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணையில் வீதிக்கு மிக அருகாமையில் அமைந்துள்ள கடையுடன் கூடிய வீடொன்றை விற்பனை செய்வதற்கு தரகர் (BROKER) தேவை (CR 38616) (3/6)

தொடர்பு: 076 394 9052

## வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் வீட்டுடன் கடையும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு மட்டும். (CS 21909) (3/6)

T.P :076 023 9797

## வீடு வாடகைக்கு

மகாத்மா வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சியில் (A9 வீதியிலிருந்து 50 m) வீடு வாடகைக்கு உண்டு.

077 027 8780

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊரவேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## கட்டடம் வாடகைக்கு

சாவகச்சேரி நகரில் A9- வீதியில்
பிரதேச செயலகத்திற்கு முன்பாக சகல
வசதிகளுடன் கூடிய 2500 சதுர அடி கொண்ட
3 மாடி கட்டடம் வாடகைக்கு உண்டு.
(வங்கி, நிறுவனங்கள், காரியாலயங்கள்,
தனியார் மருத்துவ நிலையங்கள்
நடத்துவதற்கு உகந்தது.
மேலதிக விபரங்களுக்கு:

0044 754 383 7830

## காணி விற்பனைக்கு

பத்துப் பரப்புக்கும் சற்று மேற்பட்ட ஒரு வயற்காணி மானிப்பாயில் விற்பனைக்கு உண்டு. பத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்களும், கிணறும் உண்டு. பரப்பு 9 இலட்சம் பிரத்தியேக பாதை உண்டு. தரகர்கள் தொடர்கொள்ள வேண்டாம். விலை பேசி தீர்மானிக்கலாம்.

077 225 1411

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1991 ஆம் ஆண்டு பிறந்த 10 இல் சூரியன் செவ்வாய் உள்ள I.T. துறையில் வேலை பார்க்கும் பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை.

(CS 21882) (3/6) T.P: 076 537 2060

## வாதம், வலி, குத்து, உளைவு, நோ

கட்டுக்குள் அடங்காத Diabetes,
மாறாத Ulcer,
கை / கால் விறைப்பு / வீக்கம்,
Slip Disk, தோள்பட்டை,
முள்ளந்தண்டு வலிகள்

**முழங்கால், இடுப்பு, கழுத்துவலி**

Infertility men & women
சித்த, ஆயுர், E-Acu, இயற்கை
எண்ணெய், யோகா சிகிச்சைகள்.
பக்க விளைவுகள் இல்லை

Dr. R. சிவகுருநாதன் பதிவு இல -10332
இல. 54, 33ஆம் வீதி, வெள்ளவத்தை.
Appointments only 0777 301 669

## தேவை

உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலை செய்யக்கூடிய ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
வேலை நேரம் : 8.30 – 2.30 வரை
யாழ்ப்பாணத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. (CS 21905) (3/6)

தொடர்புகளுக்கு:
077 919 9269, 077852 2078

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
அனைத்தும் புதிய
உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்ட
FORCE GARGO
SINGLE CAB விற்பனைக்கு
விலை 2 290 000/-

தொடர்பு: 077 976 7731
076 647 4046

# Study in

## UK / Canada / Sweden / Finland / Hungary / Romania

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSWP
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- இலகு கல்விக் கட்டணம்
- வங்கிப்பண வைப்பிற்கான வழிகாட்டல் (Financial Sponsorship)

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

0777 284 029
021 22 10 277

**Beverley International**
Jaffna Office
No. 401, Clock Tower Road, Jaffna.
Head Office -
No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka. Tel : 0112 576 656

அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்

திருமணத்தை இலகுவாக்கும் ஒரு முயற்சி
ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்
மற்றும் சிறப்பு பட்டிமன்றம் இடம்பெறும்

**வெள்ளவத்தை 27-11-2022**
கொழும்பு தமிழ்ச்சங்கம்
9.00am to 2.00pm

500 மணமக்கள் விபரம் அடங்கிய அருந்ததி இதழை பெற்றுக்கொள்ளமுடியும்

**யாழ்ப்பாணம் 20-11-2022**
செல்வ மஹால்
1229, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.
9.00am to 2.00pm

www.arunthathee.com | +94 777 164 524

சிறப்பு பேச்சு
திருமண தாமதம் எதனால்
ஜோதிடர் விளக்கம்



சிறப்பு விருந்தினர்
இந்தியாவிலிருந்து பிரபல ஜோதிடர்
பட்டுக்கோட்டை சுப்ரமணியன்

இந்தியாவிலிருந்து
## பிரபல ஜோதிடர்
பட்டுக்கோட்டை சுப்ரமணியன்



அழையுங்கள்
074 172 4524

உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு


**யாழ்ப்பாணம்**
நவம்பர் 20, 21, 22
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

**வெள்ளவத்தை**
நவம்பர் 24, 25, 26
541/2 காலி வீதி வெள்ளவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 07 - 1990



இறப்பு 18 - 11 - 2022

## திரு.நவரத்தினம் சுரேஸ்

**(Halo கண்ணிவெடி அகழ்வாளர், பெயின்டர்)**

ஆனைக்கோட்டை பழைய பொலிஸ் ஸ்ரேசனைப் (பூபதி பேக்கரி முன் ஒழுங்கை) பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் சுரேஸ் அவர்கள் கடந்த (18.11.2022) வெள்ளிக்கிழமை அகாலமரணம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம், இந்திராணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா செல்லம்மா (கலாசாலை வீதி, திருநெல்வேலி) முருகேசு, இராசமணி ஆகியோரின் அன்புப் பேரனும், சிவலிங்கம், மகேஸ்வரன், காலஞ்சென்ற வில்வராசா, ஜெயந்தினி, தயாநந்தினி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகமணி, சாந்தா ஆகியோரின் மருமகனும், காலஞ் சென்ற செல்வரத்தினம், இராசரத்தினம் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் காக்கதீவு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு :**
**074 194 9820, 077 935 4958**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(C S 21906) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 09 - 1959



மறைவு 18 - 11 - 2022

## செல்லத்தம்பி பிரபாகரன்

ஆறுகால்மடம் புதுவீதி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல் தெற்கு ஊர்காவற்றுறையை வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர் செல்லத்தம்பி பிரபாகரன் கடந்த (18.11.2022) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு புதல்வரும், காலஞ்சென்ற செந்தில்வேல் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலக்ஷ்மியின் கணவரும், செந்தூரன், சாந்தரூபன், நிதர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நதியா, கேமப்பிரியா, பிருந்தா ஆகியோரின் மாமனாரும், கம்சிகா, கபிசனா, கபிநாத், தர்மினி மேமிகன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான மகேந்திரராசா, தர்மபாஸ்கரன் மற்றும் ரவீந்திரன் காலஞ்சென்ற உஷாதேவி மற்றும் நாகேஸ்வரன், கலாதேவி, சதாகரன், சிறிதரன், கெங்காதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தசாமி, காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் மற்றும் ஈஸ்வரி, ரவீந்திரன், சுரேந்திரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியங்கூடல் தெற்கு,**
**ஊர்காவற்றுறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(C S 47735) (3/6)

# மரண அறிவித்தல்



## பாஸ்கரன் பகீரதி

யாழ்.புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது 93/5, கச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரன் பகீரதி அவர்கள் கடந்த (17.11.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணமாலை யோகாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பெருமாள் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாஸ்கரன் அவர்களின் பாசமிகு மனைவியும், பேபிசாளினி (லண்டன்), கிந்துசன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவோத்தமன் (லண்டன்), சௌந்திரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், மோகனதாஸ் (பிரான்ஸ்), பகீரதன் (ஜேர்மனி), பிறேமன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுரேஷ் (யாழ்ப்பாணம்) மற்றும் சஞ்ஜீவன் (பெல்ஜியம்), அனுசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறீதரன் (பிரான்ஸ்), ரவி (உருத்திரபுரம்), றஞ்சினிதேவி (கிளிநொச்சி), இராமேஸ்வரி (கனடா), யமுனாராணி (கிளிநொச்சி), காலஞ் சென்ற குகன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மலர்வு 19.07.1969

உதிர்வு 17.11.2022

**தொடர்பு : 077 468 1677**
**077 957 1153**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 21883) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புலிகளை அழிக்க உதவிய பாக்.கிரனைட் லோஞ்சர்கள்

## உற்பத்தியாளர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 20

தனது நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட கிரனைட் லோஞ்சர்கள் ஆயுதமே இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பினரை இலங்கை இராணுவம் வெற்றிகொள்ள முக்கியமான பங்குவகித்தது என பாகிஸ்தானின் ஆயுத உற்பத்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச பாதுகாப்புக் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பாகிஸ்தானில் தயாரிக்கப்படும் ஆயுதங்கள் யுத்தத்தின் போக்கைத் தீர்மானிக்கின்றன.

அதன்படி பாகிஸ்தானிலுள்ள எனது நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட கிரனைட் லோஞ்சர்களே இலங்கை விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை வெற்றிகொள்ள உதவின. இதற்கு எமது நாட்டு இராணுவத் தளபதி எமது நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியை அழைத்து நன்றி தெரிவித்திருந்தார்.

இந்த நிறுவனத்தின் 30 வீதமான வருமானம் ஏற்றுமதி வர்த்தகம் மூலமே பெறப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-இ)

# கடன்களின் வட்டி வீதம் உயர்வு; சலுகைகளை வழங்க உத்தேசம்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 20

**கடந்த காலங்களில் மிதக்கும் வட்டி வீதத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வங்கிகளுடன் கலந்துரையாடி சலுகைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.**

நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் ஷெஹான் சேமசிங்க ஆகியோரின் தலைமையில் நாடாளுமன்றில் கடந்த புதன்கிழமை பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் வினவிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

வட்டி வீத அதிகரிப்பால் ஒரு சில கடன்பெறுநர்கள் தமது முழு வேதனத்தையும் கடன் தவணைகளுக்குச் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது மத்திய வங்கி ஆளுநர் கூறுகையில், பாதிக்கப்படும் வாடிக்கையாளர்கள் வங்கிகளுடன் கலந்துரையாடி குறிப்பிட்ட சலுகைக் காலத்துக்குரிய வட்டியை மாத்திரம் செலுத்தமுடியும். இது தொடர்பில் வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

அதேபோன்று இதற்கு 2 மாதங்களுக்கு முன்னர் 70 வீதமாகக் காணப்பட்ட சாதாரண பணவீக்கம் தற்பொழுது 66வீதமாகக் குறைந்துள்ளது. 9 வீதமாகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம் 8 . 5வீதமாகக் குறைந்துள்ளது.

அதற்கமைய தற்போதைய நிதிக் கொள்கைகளுக்கமைய அடுத்த ஆண்டு இறுதியாகும் போது 4 - 5 வீதமளவில் பேணமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கமைய மத்திய வங்கியை சுயாதீன நிறுவனமொன்றாக மாற்றுவதற்கு புதிய சட்டமொன்றை வரைவு செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார்.

(ச-இ)

### ஒரு தாய்...

சினை தொடர்பில் தெற்கு மக்களுக்கும் சந்தேகம் இருக்கிறது. அதனையும் தீர்க்க வேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 75ஆவது சுதந்திர தினத்தை நாம் கொண்டாடுகின்றபோது ஒரு தாய் மக்களாக, ஒரே அணியாக சேர முடியும் என நம்புகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியாவுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி, தனது பயணத்தின் ஒரு பகுதியாக ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்திக்கான விசேட அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்திக்கான அலுவலகத்தைத் திறந்து வைத்துள்ளேன். இந்த அலுவலகத்தின் ஊடாக வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்துப் பேசமுடியும். நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் யாழ்ப்பாண மாவட்டத்துக்குச் செல்வதாகக் கூறியதையடுத்து இந்த அலுவலகத்தை நான் வவுனியாவில் திறந்து வைத்துள்ளேன். வடக்கு மக்களுக்கும் ஜனாதிபதி அலுவலகம் ஊடாக தீர்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும். இதற்காகவே இந்த அலுவலகம் தற்போது வவுனியாவில் அமைக்கப்படுகின்றது. ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் இளங்கோவன் ஊடாக இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும். இங்கிருந்து அவர் பணியாற்ற இருக்கின்றார்.

பிரச்சினைகள் குறித்து பேசிக்கொண்டு மட்டும் இருக்காமல் அந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து இங்குவந்து தீர்வு காணுமாறு அழைக்கின்றேன். இந்த அதிகாரிகள் மட்டுமன்றி அமைச்சு மட்டத்திலான அதிகாரிகளையும் அழைத்து வந்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும். இந்த அலுவலகத்துக்கு இன்னுமொரு மிக முக்கியமான பணியும் பொறுப்பும் இருக்கிறது. நாட்டிலுள்ள அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்துச் செயற்படும் பணி இந்த அலுவலகத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும்.

தீவிரவாதத்தாலும், போராலும் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பிரிவினையைக் களையவேண்டும். வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும். போரால், பயங்கரவாதத்தால் இந்த நாட்டின் இறையாண்மைக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் தெற்கு மக்களுக்கும் சந்தேகம் இருக்கிறது. அதனையும் தீர்க்க வேண்டும். முஸ்லிம் மக்கள் தமக்கான உரிமைகள் குறித்து அவர்கள் கவனம் செலுத்தியுள்ளார்கள். மலையக மக்களும் தமது பிரச்சினைகள் குறித்து தீர்வுகாண அழைக்கிறார்கள். அவர்களும் தம்மை தேசிய இனமாக இணைப்பது குறித்து பேசி வருகிறார்கள். இவை குறித்தும் தீர்வுகாணவேண்டும்.

மக்களுக்கு இடையில் இருந்த இடைவெளி தற்போது குறைந்துள்ளது. அதனால் தீர்வு காண வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இதைக் கிரமமாக முன்னெடுக்கப்படவேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவுள்ளேன். முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடனும், சிங்கள மக்களின் பிரதிநிதிகள் மற்றும் சிங்கள மக்களுடனும் பேச வேண்டியுள்ளது.

இங்கு ஒரு முக்கியமான விடயம் உள்ளது. நாட்டை பிளவுபடுத்தாமல் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். அதனால் அந்த மக்களின் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டியுள்ளது. நாம் ஒன்றிணைந்து பணியாற்றும்போது அந்தப் பிரச்சினைகளுக்கும், சந்தேகங்களுக்கும் தீர்வுகாண முடியும். போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களும் ஏனைய மக்களைப் போல் சமமான உரிமையைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

இங்கு என்ன பிரச்சினை?. சிலர் வடக்கின் பிரச்சினை என்கிறனர். சிலர் தமிழரின் பிரச்சினை என்கின்றனர். சிலர் இனப் பிரச்சினை என்கின்றனர். பலவாறு கூறுகிறார்கள். இவை அனைத்துக்கும் நாம் பொதுவாக எந்த சொற்பதத்தைப் பயன்படுத்தவேண்டும் என யோசிக்கின்றேன். 'யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த எழில்கொள் சேய்கள்' என்று தேசிய கீதத்தில் ஒரு வரியே இருக்கிறது. 75ஆவது சுதந்திர தினத்தை நாம் கொண்டாடுகின்றபோது ஒரு தாய் மக்களாக, ஒரே அணியாக சேரமுடியும் என நம்புகின்றேன் - என்றார்.

(அ-ம-18-22)

### ஜனாதிபதியின்...

துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று வவுனியா மாவட்டச்செயலகத்துக்குச் சென்று அங்கு அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே ஜனாதிபதியின் வடக்குக்கான பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடத்தது?', 'இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கு எதிராக சர்வதேச விசாரணைவேண்டும்', 'காணாமலாக்கப்பட்டவர்களுக்கும் படையினரிடத்தில் சரணடைந்தவர்களுக்கும் என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்த வேண்டும்' உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பலநூறு பொலிஸார் களமிறக்கப்பட்டு போராட்டத்தைத் தடுத்துநிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான நிலைமை நீடித்தது.

(அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாணவனின்...*

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மாணவர்களை இலக்குவைத்து போதைப்பாக்கு விற்பனை செய்யும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையில் மாணவர்களிடம் போதைப்பொருள்கள் பழக்கம் இருக்கின்றது என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பிரதேச நன்னடத்தை அபிவிருத்திக்குழு மற்றும் பொலிஸார் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன்போதே மாணவன் ஒருவனிடம் இருந்து மேற்படி கஞ்சா கலந்த மாவாப் பாக்கு மீட்கப்பட்டுள்ளது. இதைவிட மூன்று மாணவர்களிடம் இருந்து புகையிலை மற்றும் சுண்ணாம்பு என்பன மீட்கப்பட்டுள்ளன.

போதைப்பாக்கை உடைமையில்வைத்திருந்த மாணவனிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில் தென்னிலங்கையைச் சேர்ந்த தமிழர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் தற்போது குடும்பத்துடன் கிளிநொச்சியில் வசித்து வருகின்றார். சந்தேகநபரின் மகனே தனது நண்பர்களுக்கு போதைப்பாக்கைக் கொண்டுசென்று வழங்கியுள்ளார் என்று தெரியவந்துள்ளது. இதையடுத்து மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். மாணவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டுவிடுவிக்கப்பட்டுள்ளனர்.

(அ-ம-125)


## ஆங்கில வகுப்பு

குழு/தனி வகுப்புகள் தரம் 1 முதல் 8 வரை ஆங்கிலம், கணிதம் குறைந்த புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு விஷேட கவனம் செலுத்தப்படும்.

T.P: 076 1124 145

## தேவை

பில்கிளாக், பொதியிடல், பயிலுனர், மாவறுத்தல், மில் அனுபவம் உள்ளவர் (1200/=) என்பவற்றிற்கு பெண் ஊழியர் தேவை. தொடர்பு - பிருந்தா மில் 179 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

Tele:077 174 6101

## கடை வாடகைக்கு உண்டு

சுண்டுக்குளியில் கடை வாடகைக்கு உண்டு.

0777 2424 27
077 999 0640

## வேலையாட்கள் தேவை

கொத்து, றைஸ் போடக்கூடியவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
T.P:074 1678 254

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கில் Medical Faculty க்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட 4 அறைகளையும், 4 குளியலறைகளையும் கொண்ட வீடு ரூபா 25000 /= மாதாந்த கட்டண அடிப்படையில் வாடகைக்குண்டு.

(cs.21915) (2.6)

076 243 0394

## ரோமானியா வேலைவாய்ப்பு



15 - கிச்சன் ஹெல்பர்
USD 550 சம்பளம் : Rs.199,815/-



15 - வெயிட்டர் ஹெல்பர்
USD 550 சம்பளம் : Rs.199,815/-

15 - ஹவுஸ்கீப்பிங்
USD 550 சம்பளம் : Rs.199,815/-

நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் — 1 USD Rs.363.30

- தங்குமிடம் கம்பனியால் வழங்கப்படும்.
- மருத்துவ வசதி ரோமானியா நாட்டு சட்டத்தின் படி வழங்கப்படும்
- உணவு கம்பனியால் வழங்கப்படும்.
- வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம்,கிழமைக்கு 48 மணி நேரம்.
- ஒரு நாள் லீவு வழங்கப்படும்
- 2 வருட ஒப்பந்தம் (புதுப்பிக்கத்தக்கது)

இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும் ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் ரோமானியா நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

max adz


CHERISH GLOBAL RECRUITMENT AGENCY SLBFE LL 3204

செரிஷ் குளோபல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 178 & 178/1 , சுபராம றோட்,நுகேகொட

தொடர்பு கொள்ளுங்கள் : 0112364777 | 0727200005
E - Mail : cherishrecruitment@gmail.com 0777215443


# மரண அறிவித்தல்

பிறப்பு 03.12.1950 — **தம்பித்துரை வினாயகமூர்த்தி (பரம்சோதி)** — இறப்பு 19.11.2022



யாழ்ப்பாணம் கோணாந்தோட்டம் கே.கே.எஸ். வீதியை பிறப்பிடமாகவும் இந்தியா (சென்னை)யை வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை வினாயகமூர்த்தி (பரம்சோதி) நேற்று (19.11.2022) சனிக்கிழமை இந்தியா சென்னையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை நாகரத்தினம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் (வைரமுத்து மாமா) பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், உமாதேவியின் அன்புக் கணவரும், பிரதீபா (யாழ்ப்பாணம்), பிரசன்னா (பிரான்ஸ்), பிரசாத் (கனடா), பிரவீனா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமணன், கார்த்தி, அசோக்குமார் ஆகியோரின் மாமனாரும், பிரதீஷ், பிரிதிகா, ஹரீனா, அகிலா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இந்தியாவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (CS 21927) 1-6

தகவல் : குடும்பத்தினர்.
077 088 4630, +9190 435 66133

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 21 . 11 . 1947



ஆண்டவன் அடியில் 19 . 11 . 2022

## திரு.ஆறுமுகம் பேரின்பநாயகம் (குணம்)

**(உரிமையாளர் சபீதா உணவகம்)**

யாழ். மண்டைதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பேரின்பநாயகம் அவர்கள் நேற்று (19.11.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தில்லையம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கந்தையா நாகலட்சுமி தம்பதியரின் மருமகனும், சச்சிதானந்தசிவலட்சுமி (ராணி) இன் அன்புக் கணவரும், கஜிதா, உபேந்திரன் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), உஷாங்கன், சபிதா, சங்கீதா, விஜிதா (பேராதனைப் பல்கலைக்கழகம்), கிருஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசதீசன் (பாய்க்கடை- யாழ்ப்பாணம்), கடாட்ஷனி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்திய சாலை), தர்மிலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மாவிஷன், அதிஷயா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற மகேஸ்வரி, நாகேஸ்வரி, காலஞ்சென்ற தணிகாசலம், காலஞ்சென்ற தருமநாயகம், காலஞ்சென்ற தையல்நாயகி, கலாமணி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான வைகுந்த ராஜா, வைபோகராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

10/3, நுணாவில் கல்வயல்
1ஆம் ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 155 1531

(CS 21921) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1925



மறைவு 19 . 11 . 2022

## கைலாயபிள்ளை சிவக்கொழுந்து

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை சிவக்கொழுந்து நேற்று (19.11.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கைலாயபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரமு சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், செல்லத்துரை, இராசையா, நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் யோகம்மா, அமரர் சுப்பையா, பூபாலசிங்கம், தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீகாந்தன், கமலாம்பிகை, சந்திரகலா, அமரர் சிவகணநாதன், நித்தியகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசமணி, அமரர் கணேசபிள்ளை, அமரர் பாலசுப்பிரமணியம், சுவர்ணமாலா, தெய்வேந்திரம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சந்திரமோகன் - தாட்சாயினிதேவி, சந்திரகாசன் - தர்மாபதி, கார்த்திகாயினி-சுகணீதகுமரன், கலைவாணி - அமரர் பஞ்சாட்சரநாதன், கலைச்செல்வன் - சிவகௌரி, ஜங்கரன் - அனுஷியா, தாட்சாயினி - கோபிபாலமுரளி, ஜெனார்த்தனன்- சோபிகா, திருக்குமரன் - ஜெயசங்கரி, சசிபாலன் - ஹம்சலா, பிரதீபன் - மயூரதி, சோபிகா- பிரகாஷ், பிரசன்னா - சரளா, பிரணவன், ஹம்சியா, தனுஜன் ஆகியோரின் பேர்த்தியும், சைத்தரண்யா, சாஹித்தியா, சஹானா, சக்திதரன், அக்ஷன், அகர்ஷன், அஞ்சனன், கௌசிகன், காரணன், கஜசரவணன், கஸ்தூரி, கௌதமன், கஜல்வண்ணன், கஜீபன், கௌசிகா, ஜஸ்வின், ஜங்சியன், அஹானா, சாத்வீகன், அஸ்விகன், சுஜானா, கிரிஸ், பிரீத்தி, லஸ்ஜா, அல்வின், நிலன், ஐஸ்வர்யா, அனஞ்ஞா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 488 6036,
0041779099379

(CS 21922) 1/6

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவன் மீது துஷ்பிரயோகம்: மூடி மறைக்க கடும்முயற்சி?

யாழ்ப்பாணம், நவ. 20

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுவர் இல்லத்தில் சிறுவன் ஒருவன் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்ட விவகாரம் தெரியவந்ததைத் தொடர்ந்து, அங்கு இடம்பெற்ற பல்வேறு குறைபாடுகள், வழக்குகள் தொடர்பான விடயங்கள் அம்பலமாகியுள்ளன.

குறித்த சிறுவர் இல்லத்தின் மேற்பார்வையாளர் ஒருவர், அங்குள்ள சிறுவன் ஒருவனை மூன்றுநாள்களாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

இந்தவிவகாரம் தெரியவந்ததையடுத்து, சிறுவர் இல்ல நிர்வாகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர், பாதிக்கப்பட்ட சிறுவனை அழைத்து, பாலியல் துஷ்பிரயோக விடயத்தை வெளியில் கூறினால், அது இல்லத்தின் பெயரை கெடுத்துவிடுமென்பதால் அவ்வாறு கூற வேண்டாம் எனவும் அதையும் மீறி வெளியே சொன்னால் அந்தச் சிறுவனை சிறுவர் நன்னடத்தை பாடசாலைக்கு அனுப்புவேன் என்றும் அச்சுறுத்தும் பாணியில் தெரிவித்து, விடயத்தை மூடிமறைக்க முயற்சித்துள்ளார்.

இருப்பினும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஊடாக இந்த விடயம் தெரியவந்ததைத் தொடர்ந்து மேற்பார்வையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். இது தொடர்பிலும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மற்றொரு வழக்கை கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்துள்ளனர்.

மேற்படி சிறுவர் இல்லத்தில் பல்வேறு குறைபாடுகள் உள்ளதாகத் தெரிவித்து அதனை மேம்படுத்த சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தால் கால அவகாசம் வழங்கப்பட்டும் அவை மேம்படுத்தப்படவில்லை. குறிப்பாக சிறுவர்களின் கல்வி, உணவு, போஷாக்கு போன்ற விடயங்களில் அக்கறை காண்பிக்கப்படவில்லை. மேலும் தகுதியான பராமரிப்பாளர்கள் நியமிக்கப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் சிறுவர் நீதிமன்றில் மற்றொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேவேளை குறித்த சிறார் இல்ல நிர்வாகத்தைச் சேர்ந்த சிலரும் இல்லத்தில் வசிக்கும் சிறுவர்களை வைத்து தமது வீட்டுப் பணிகளையும், தமது மேலதிகாரிகள் வீட்டு வேலைகளையும் செய்ய வைத்தனர் என்று தெரிவித்து கோப்பாய் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மேலும் இரு வழக்குகள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## திருட்டில் ஈடுபட்ட நபர் ஹெரோய்னுடன் கைது

### தாலிக்கொடி, பணம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 20

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மையில் மூன்று வீடுகள் உடைத்துத் திருடப்பட்டதாக பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து ஆறு பவுண் தாலிக்கொடி, முப்பதாயிரம் ரூபா பணம், 120 மில்லிகிராம் ஹெரோய்ன் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைவாகவே பொலிஸாரால் மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், மல்லாகம் நீதிமன்றத்தில் சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளனர். (ம-125)



## போராட்டம்...

யைக் கோரியும் வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பணத்துக்கான நாடகம் என்று பொலிஸ் அலுவலர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பார்த்துத் தெரிவித்தார். இதனால், போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பமான இந்தப் போராட்டம் தீவிரம் பெற்றதையடுத்தே தமிழ்ப் பொலிஸ் அலுவலர் 'இந்தப் போராட்டம் பணத்துக்காகவும் வெளிநாட்டு ஊடகங்களுக்காகவும் முன்னெடுக்கப்படுகின்றது' என்று தெரிவித்தார். இதற்கு 'உங்களைப் போன்றோர்தான் எம் இனத்தின் சாபக்கேடு. உங்களைப் போன்றோரால்தான் எமக்கு இந்த நிலைமை' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பதிலடி கொடுத்தனர். (அ-ம-110)

## காணிப்...

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாணத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்த அபிவிருத்திக் குழுக்கூட்டம் நடைபெற்றதுடன், அந்த மாவட்டங்களின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

மாகாணத்தில் காணி, வீடு, சுகாதாரம், நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கப்படக்கூடிய தீர்வுகள் தொடர்பில் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக வடக்கு மாகாணத்தின் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார். வடக்கில் இதுவரையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேவையான தீர்வுகளை வழங்குவதற்கு அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

**செட்டிகுளம் மக்களுக்கு விரைவில் காணிகள்!**

செட்டிகுளம் பகுதியில் 1994ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு இதுவரை காணிகள் வழங்கப்படாமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இங்கு ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

செட்டிகுளம் பிரதேசத்தின் காணிப் பிரச்சினை தொடர்பில் மத்தியஸ்தம் செய்து 3 மாதங்களுக்குள் தீர்வு காணுமாறு வவுனியா மாவட்டச் செயலருக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, இது தொடர்பில் நீதி அமைச்சு மற்றும் காணி அமைச்சிடம் விசாரணை செய்வதாகவும் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிட்ட சில விவசாய நிலங்கள் தொல்பொருள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளமையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

**வீடமைப்புத் தொடர்பில் துரிதமான நடவடிக்கை**

வடக்கு மாகாண மக்களின் வீட்டுப் பிரச்சினை தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், வடக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் உள்ளன என்றும், அதற்கு மேலும் சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடளாவிய ரீதியில் தற்போது பல வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், வடக்கு மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள குளங்களை புனரமைத்தல், உரப் பிரச்சினைக்குத் தீர்வு காணல் மற்றும் விநியோக நடவடிக்கைகளை சீர்படுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. வடக்கு மாகாணத்தில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் மருத்துவர் பற்றாக்குறை குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி தேவையான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்தில் இடம்பெறும் பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் விளக்கமளித்ததுடன், அது தொடர்பில் விரைவாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நகர அபிவிருத்தி வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாத் பதியுதீன், சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட செயலர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-22-110)

## சர்வதேச...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வவுனியா நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உணவுப் பாதுகாப்புக்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது எமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்துக்காக நான்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் பசும்பால் கைத்தொழில் இந்திய உதவியின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக, நாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உணவுப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடவும் நீங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். உலகளாவிய உணவுப் பற்றாக்குறை எதிர்காலத்தில் ஏற்படலாம். அவ்வாறான சூழ்நிலையில், இலங்கையைப் பாதுகாக்க இந்த உணவுப் பாதுகாப்புத் திட்டம் முக்கியமானது என்றே கூறவேண்டும். ஆபிரிக்கா ஏற்கனவே உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளது.

நாம் பெரும்போகத்தில் வெற்றிகண்டுள்ளோம். ஏனைய பயிர்ச்செய்கையிலும் இதுபோன்ற விளைச்சல் கிடைத்தால், எளிதில் உணவுப் பற்றாக்குறையை வெற்றிகொள்ளலாம். இதைத் தவிர, இன்னும் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று போஷாக்குக் குறைபாட்டைக் கட்டுப்படுத்தல், இரண்டாவது கிடைக்கும் விளைச்சலைப் பாதுகாத்தல் ஆகும்.

அறுவடையின்போது ஏற்படும் விரயத்தைக் குறைக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று, அவற்றை சேமிப்பதற்கும் நுகர்வோருக்கு விநியோகிக்கும் பணிகளைப் பலப்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம். இதில் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு பெரிய பொறுப்புள்ளது. கிடைக்கும் மேலதிக உணவைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

வவுனியா விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நாம் தற்போது ஆராய்ந்து வருகின்றோம். இவை அனைத்தும் நடைபெற உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன் - என்றார். (அ-ம-18)

## ஆலயக்...

ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள ஆலயக் கிணற்றிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நவரத்தினம் சுரேஸ் (வயது- 32) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தவறி...*
கொங்கிறீட் இடும் வேலையின்போது முட்டுக்கொடுக்கப்பட்டிருந்த மரங்கள் வீழ்ந்தமையால் குறித்த பணியாளர் நிலைதவறி கட்டட இடிபாட்டுக்குள் வீழ்ந்துள்ளார். இதையடுத்து அவர் உடனடியாக மீட்கப்பட்டு பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். பிறிதொருவர் காயமடைந்த நிலையில், அவர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(அ-ம-113)


## வாகன தரிப்பிடத்துடன் வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்டிய அல்லது ஐந்து சந்தியை அண்டிய பகுதிகளில் வாகன தரிப்பிடத்துடன் வீடு வாடகைக்குத் தேவை.

077 6250 490

## விற்பனைக்கு

பாட்டுவாள், றோதைவாள் இயந்திரங்கள் விற்பனைக்கு

(CS 47713) (3/6) T.P 077 257 7688

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. (CS 47742) (3/6)

தொடர்புகளுக்கு : 076 542 2473

## வீடு வாடகைக்கு

அரசடி வீதி, யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக 4 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (CS 47692) (3/6)

070 193 0100, 076 253 0403

## கட்டடம் வாடகைக்கு

கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள மாடிக்கட்டம் 2400 ச.அடி வாடக்கைக்கு விடப்படும். வாகன தரிப்பிடம் உண்டு. தொடர்புகொள்வேண்டிய தொலைபேசி இலக்கம்.

077 617 9140

## நயினை அம்மன் திருமணசேவை

**திருமணத்திற்கு வரன் தேடுகிறீர்களா?**

உள்நாடு, வெளிநாடு, அரச உத்தியோகம், தனியார்துறை, செவ்வாய்க்குற்றம், சூரியன்+செவ்வாய் போன்ற அனைத்து விதமான ஜாதகங்களும் எம்மிடம் மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**பெண்களுக்கு விசேட சலுகைகள் உண்டு**

நல்லூர், யாழ்ப்பாணம் 0741117874

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் ஆடியபாதம் வீதியில் இருந்து 500 m தூரத்தில நல்ல சூழலில் 1 1/2 பரப்புக் காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.

0741345805

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எமது Air Condition (Repair) சேவை நிறுவனத்தில் பணியாற்ற ஆட்கள் தேவை.
முன் அனுபவமுள்ளவர்கள் அல்லது பழக ஆர்வமுள்ளவர்களும் விரும்பத்தக்கது.

Tel: 070 620 8272

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

01. **பிளம்பர் (Plumber)**
02. **எலக்ரீசியன் (Electrician)**



நேர்முகத்தேர்வு :
**21.11.2022** திங்கட்கிழமை
மு.ப. 9.00 - 12.00.
பி.ப. 4.00 - 6.00 மணிவரை

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## சிறுநீரகம் தேவை

41 வயதுடைய சிறுநீரக நோயாளர் ஒருவருக்கு சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு **A+ இரத்த வகையைச்** சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

தொடர்பு: 077 513 1368

## வேலை வாய்ப்பு

அலுவலக உதவியாளர் தேவை. சுயவிபரக் கோவை அனுப்ப வேண்டிய முகவரி

(CS 47736) (3/6) jobsbank04@gmail.com

## தேவை

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றிற்கு சமையல் மற்றும் தோட்டவேலைகள் செய்யக்கூடிய 35 வயதிற்கு மேற்பட்ட ஆண் வேலையாள் தேவை. சைவ, அசைவ சமையல் செய்யக்கூடியவராக இருக்க வேண்டும். தோட்டவேலைகள் செய்யக்கூடியவராக இருக்கவேண்டும். பண்ணையில் தங்கி நிற்கக் கூடியவராக இருக்கவேண்டும். நிரந்தரமாக வேலை செய்யக்கூடியவராக இருக்கவேண்டும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகைமையுடையோர், அலுவலக நேரத்தில் (9am - 5pm) **0777845566** என்ற எண்ணிற்கு தொடர்புகொள்ளவும். (CR 38616) (3/6)

## வாகனம் வாடகைக்குத் தேவை

**ஹன்ரர், Elf, பட்டா ரக வாகனம் (With Full Body)** நாள் / மாத வாடகைக்குத்தேவை. கிழமை நாள்களில் காலை 9.00 - 12.00 மணிவரை (cs.47731) (2.6)

021 221 0900

## தலைமைக்குருக்கள் தேவை

கொழும்பில் பிரபல முருகன் ஆலயம் ஒன்றுக்கு தலைமைக் குருக்கள் உடன் தேவை. சம்பளம் 35000/- க்கு மேல் சகல வசதிகளும் அடங்கிய வீடு மற்றும் மாதம் 02 நாள் விடுமுறை, அத்துடன் விசேட பூசை நாட்களைவிட ஏனைய நாட்களில் வெளிவேளைகளுக்கும் அனுமதி உண்டு. (CS 21885) (3/6)

076 089 3388, 075 811 3594

## பதவி வெற்றிடம்

**யாழ் STS வைத்தியசாலை**

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கிறது

- வரவேற்பாளர்
- களஞ்சிய உதவியாளர்
- மருந்தக உதவியாளர்.
- சிற்றுண்டிசாலை நடத்துனர்
- வைத்திய உதவியாளர் (இரவு / பகல்)
- காசாளர்

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் மேலதிக அனுகூலங்களும் வழங்கபடும். யாழ் நகரை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் மட்டும் உங்கள் சுயவிபரக் கோவையினை வைத்தியசாலை வரவேற்பு பகுதியில் கையளிக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 077 120 3763
(CS 47715) (2.6)

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் அருகில், A9 வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கீழ்த் தளத்தில் இரு கடைகளும் மேல்தளத்தில் இரு கடைகளுமாக அமையப்பெற்ற கடைத் தொகுதி பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வாடகைக்கு விடப்படும். (CS 21874) (3/6)

077 247 0590, 076 535 7084

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1986ம் ஆண்டு பிறந்த, 7 இல் செவ்வாய் உள்ள அனுஷ நட்சத்திரம் கிரக பாவம் 50 உடைய பிஸ்னஸ் சொத்துள்ள மகனுக்கு அரசாங்க வேலையாக இருந்தால் சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. (CS 47695) (3/6)

077 986 5957

## மணமகள் தேவை

1987 இல் பிறந்த (உத்தரம் 2ஆம் பாதம்) அரச அலுவலக உதவியாளராக பணிபுரியும் மணமகனிற்கு இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த மணமகள் தேவை. (CS 21514) (3/6)

077 515 1761, 076 159 5141

## வேலை வாய்ப்பு

விற்பனை பிரதிநிதி, பொதி செய்பவர்கள் (பெண்கள் தங்கி நின்றும் வேலை செய்யலாம்) தேவை.
**சம்பளம் : 30 000/- 60 000/- வரை**

(CS 21886) (3/6) T.P :076 624 7387

## வேலையாள்கள் தேவை

**யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல்யமான நகைக் கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.**

தொடர்பு: 021 222 2552
076 076 2552

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

**1 சதுர அரடி 150 /= இல் இருந்து**

**போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம் உத்தரவாதம் தரும்பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.**

**உலகத்தரமிக்கது**

**வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்**

FINEX இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**North and East Engineering**
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி **A9** பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு.**

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்:-**

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

**தொடர்பு:- ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

## துயர் பகிர்கின்றோம்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 20 - 09 - 1970 | 18 - 11 - 2022 |

யாழ். பல்கலைக்கழக நிதிக்கிளைக் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய

### ஐயம்பிள்ளை யோகராசா

அவர்கள் கடந்த (18.11 .2022) அன்று இறைபதம் அடைந்தார். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்: **நிதிக்கிளை உத்தியோகத்தர்கள், நலன்புரிச்சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(cr.38620) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கடந்தவார சஞ்சீவியில் 'பிரபாகரனை சிங்களவர்கள் ஏன் கொன்றார்கள்? ' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை,


'if Prabakaran Had Been In Srilanka Now? Counter Response To Ranil's Terrorism' என்ற தலைப்பில் Rehan Fernando 'கொழும்பு ரெலிகிராப் ' இணையத்தளத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கமே. அதனை தமிழில் ந.பரமேஸ்வரன் மொழிபெயர்த்திருந்தார். தொழிநுட்பக் காரணிகளால் கட்டுரையில் அந்தக் குறிப்பு இடம்பெறவில்லை.


Registered as a Newspaper

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 கார்த்திகை 04 ஞாயிற்றுக்கிழமை (20.11.2022) சிகரம் : 125

# 'தந்திரம் செய்'





○ நிலாந்தன்

ரணில்+ ராஜபக்ச அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணும் நோக்கத்தோடு தமிழ்க் கட்சிகளோடு பேசப்போவதாக கடந்த வாரம் அறிவித்திருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்துவதற்கும் ஐ.நா.வை சமாளிப்பதற்கும் இதுபோன்ற அறிவிப்புகள் தேவை. அல்லது தமிழ்மக்களின் தலையில் ஏதாவது ஒரு அரைகுறைத் தீர்வைக் கட்டி விடுவதற்கு இது உகந்த தருணம் என்று ரணில் சிந்திக்கிறாரா?

ஏனெனில் 2015 ஆம் ஆண்டில் ரணில்+ மைத்திரி அரசாங்கம் நிலைமாறு கால நீதிச் செய்முறைகளின்கீழ் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய ஒரு புதிய யாப்பை உருவாக்க முற்பட்டது. அந்த யாப்புருவாக்கச் செய்முறைகள் இடைக்கால வரைபுவரை முன்னேறின. ஆனால் இடையே மைத்திரிபால சிறிசேன ஆட்சியைக் குழப்பினார். அதனால் யாப்புருவாக்க முயற்சிகள் இடையில் நின்று போயின. அதன்பின் ஆட்சிக்கு வந்த கோத்தாபய ஒரு புதிய யாப்பை உருவாக்கப்போவதாக கூறிக்கொண்டு ஒரு நிபுணர் குழுவை உருவாக்கினார். இப்பொழுது ரணில் மீண்டும் வந்து விட்டார். அவர் 2018 இல் விட்ட இடத்திலிருந்து ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சியை தொடங்கப்போகிறாரா? அல்லது அதே பழைய முயற்சிக்கு ஒரு புதிய லேபலை ஒட்டி அதைத் தொடரப்போகிறாரா? அல்லது முற்றிலும் புதிதாக ஒரு முயற்சியை தொடங்கப்போகிறாரா? அல்லது சர்வதேச நாணய நிதியம். ஐ.நா. போன்றவற்றைத் திசை திருப்புவதற்குத் தமிழ் மக்களையும் பங்காளிகளாக்கும் ஒரு தந்திரமா? என்ற கேள்விகளை தமக்குள் எழுப்பி, தமிழ்த் தரப்பு ரணிலை எதிர்கொள்ளவேண்டும்.

அவ்வாறு தமிழ்த் தரப்பு ரணிலை எதிர்கொள்வதற்காக தங்களுக்கிடையே கலந்து பேசி ஒருமித்த கருத்தை எட்டவேண்டும் என்று கூறி கடந்த வாரம் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஏனைய கட்சித் தலைவர்களுக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பியிருந்தார்.அதில் அவர் சமஷ்டிதான் தமிழ் மக்கள் கேட்கும் தீர்வு என்ற அடிப்படையில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து அந்தக் கோரிக்கையை முன்வைக்கவேண்டும் என்று கேட்டிருந்தார். ஆனால் அது தொடர்பில் அவர் தனது சொந்தக் கட்சியான தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடுகூட உரையாடவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. அவருடைய அழைப்பை, கூட்டமைப்பில் உள்ள பங்காளி கட்சிகள் பொருட்படுத்தவில்லை. கூட்டமைப்புக்கு வெளியே உள்ள கட்சிகளும் அந்த அழைப்பை பொருட்படுத்தவில்லை.சம்பந்தர் அழைத்தால் மேசைக்கு வரலாம் என்ற நிலைப்பாட்டை ஏனைய கட்சிகள் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால் சுமந்திரனின் அழைப்பு வெற்றி பெறவில்லை. கடந்த செவ்வாய்க்கிழமை சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இடம்பெறவிருந்த அந்தச் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.அதாவது பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக தமிழ்த்தரப்பு தங்களிடையே பேச வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு முயற்சி சறுக்கிவிட்டது.

அப்படி ஒரு முயற்சி அவசியமானது. அதை கட்சிகள் தங்களுக்கிடையே தாங்களாக செய்யவேண்டும். அல்லது குடிமக்கள் சமூகங்கள் அதை நோக்கி கட்சிகளை உந்தித்தள்ள வேண்டும். ஏனென்றால் தமிழ்த் தரப்பு என்ன கேட்கின்றது என்பதனை ஒரே குரலில் சொன்னால் அதற்குப் பலம் அதிகம் என்று அபிப்பிராயம் பெரும்பாலான வெளிநாட்டுத் தூதரகங்கள் மத்தியில் உண்டு. தமிழ் குடிமக்கள் சமூகங்களை சந்திக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அதை வலியுறுத்திப் பேசுவதுண்டு. தமிழ்மக்கள் மத்தியில் இருக்கும் பிரதான பலவீனமாக அதைச் சுட்டிக்காட்டிப் பேசும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் உண்டு.இப்படிப்பட்டதோர் பின்னணியில் தமிழ்த்தரப்பு . தான் எதைக் கேட்கிறது என்பதனை ஒரே குரலில் முன்வைக்க வேண்டிய ஒரு கட்டாயத் தேவை உண்டு. தமிழ்க் கட்சிகள் என்ன கேட்கின்றன? இதுவரையிலும் தமிழ்த் தரப்பு முன்வைத்த தீர்வு முன்மொழிவுகளை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளுமே, எல்லாக் குடிமக்கள் சமூகங்களுமே ஒற்றையாட்சியை நிராகரிக்கின்றன. அவை கூட்டாட்சிப் பண்புடைய சமஷ்டிப் பண்புடைய தீர்வைத்தான் கேட்கின்றன.

இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் தமிழ்த் தரப்பு அதிகளவு தீர்வு முன்மொழிவுகளை முன்வைத்த ஒரு காலகட்டம் எதுவென்றால் கடந்த ஆறு ஆண்டுகாலப் பகுதிதான். 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 ஐ.நா. தீர்மானத்தின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்க நிலைமாறுகால நீதிச் செய்முறைகளின் கீழ் நாடாளுமன்றத்தை சாசனப் பேரவையாக மாற்றினார். அதாவது ஒரு புதிய யாப்பை உருவாக்கும் நோக்கத்தோடு நாடாளுமன்றம் சாசனப் பேரவையாக மாற்றப்பட்டது. அதிலிருந்து தொடங்கி கோத்தாபயவின் யாப்புருவாக்கத்துக்கான நிபுணர்குழு வரையிலும் தமிழ்த் தரப்பு தனது முன்மொழிவு களை முன்வைத்து வருகிறது. இதில் தமிழ்க்கட்சிகள்,தமிழ் குடிமக்கள் சமூகங்கள்,தமிழ் மக்கள் பேரவை போன்ற மக்கள் அமைப்புக்கள், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் அமைப்புகள் போன்ற பல்வேறு தரப்புகளும் கடந்த 6 ஆண்டு காலப் பகுதிக்குள் அதிகளவு முன்மொழிவுகளை வைத்திருக்கின்றன.

> ரணில் இனப்பிரச்சினையை சர்வதேசமயநீக்கம் செய்ய முற்படுகிறார். வெளியாரின் தலையீடின்றி பிரச்சினையைத் தீர்க்க வருமாறு தமிழர்களை அழைத்திருக்கிறார்.போரில் வெல்வதற்கு அவர்களுக்கு வெளிநாடுகளின் ஆயுதமும் உதவிகளும் தேவை. ஆனால் சமாதானத்துக்கு அது தேவையில்லையாம்.தமிழ்த் தரப்பு அதை ஏற்கக்கூடாது.இந்தியாவையும் உள்ளடக்கிய ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தத்தைக் கேட்க வேண்டும்.

இதில் குறிப்பாக தமிழ் மக்கள் பேரவை முன்வைத்தது ஒரு சமஷ்டி முன்மொழிவு. அதுபோலவே வட மாகாணசபை முன் வைத்ததும் ஒரு சமஷ்டி முன்மொழிவு. விக்னேஸ்வரனின் கட்சி 'கொன்பெடரேஷனை' கேட்கின்றது. அதுவும் உயர்வான ஒரு சமஷ்டி தான். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு சமஷ்டிக் கட்டமைப்பைக் கேட்கிறது. அரசாங்கம் ஒற்றை ஆட்சி முறைமையை மாற்றி கூட்டாட்சிக்குத் தயார் என்று அறிவித்தால் தாம் ரணிலுடன் பேசத்தயார் என்று அந்தக்கட்சி கூறுகிறது.

இதில் கூட்டமைப்பு ரணிலோடு இணைந்து உருவாக்க முயன்ற யாப்புக் குறித்து விமர்சனங்கள் உண்டு. தமிழ் மக்களின் பங்களிப்போடு முன்னெடுக்கப்படும் முதலாவது யாப்புருவாக்க முயற்சி அதுவென்று சம்பந்தர் சொன்னார். கூட்டமைப்பு அதை சமஷ்டிப் பண்புடையது என்று கூறியது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய அமைச்சர்களும் அது ஒற்றை ஆட்சிதான் என்று சொன்னார்கள்.சம்பந்தர் "பிரிக்கப்படமுடியாத, பிளவுபடாத இலங்கைத் தீவு" என்று திரும்பத் திரும்ப ஒரு மந்திரம் போல சொல்லிக் கொண்டிருந்தார். சமஷ்டி என்று வெளிப்படையாக லேபலை ஒட்டினால் அதைச் சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள் என்றும் காரணம் கூறப்பட்டது. அதாவது நடைமுறையில் அந்தத் தீர்வு முயற்சியை அவர்கள் சிங்கள மக்களுக்கு ஒற்றை ஆட்சி என்று வியாக்கியானம் செய்தார்கள். தமிழ் மக்களுக்கு அதை கூட்டாட்சி என்று வியாக்கியானம் செய்தார்கள். ஆனால் இப்பொழுது சுமந்திரன் கூறுகிறார் 'ஒரு சமஷ்டித் தீர்வை நோக்கி எல்லாக் கட்சிகளும் ஒரு குரலில் பேச வேண்டும்' என்று.

அவர் ஏனைய கட்சித் தலைவர்களுக்கு அனுப்பிய மின்னஞ்சலில் கூறப்பட்டபடி சமஷ்டிதான் தீர்வு என்பதனை தமிழரசுக்கட்சி உறுதியாகவும் வெளிப்படையாகவும் விட்டுக்கொடுப்பின்றியும் கூறுமாயிருந்தால் ஏனைய கட்சிகளும் அவர்களோடு இணைந்து ஒரே குரலில் அந்தக் கோரிக்கையை முன்வைக்கலாம். இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணைய மறுத்தால் அதுவும் நல்லதே. அந்தக்கட்சி வெளியில் நின்று கொண்டு ஏனைய கட்சிகளை கண்காணித்துக் கொண்டிருக்கும். ஏனைய கட்சிகள் தமது கோரிக்கைகளில் இருந்து இறங்கினால் அவற்றை முன்னணி அம்பலப்படுத்தும். எனவே ஒரு கட்சி எதிர் நிலையில் நிற்பதும் நல்லது. ரணில் இனப்பிரச்சினையை சர்வதேசமயநீக்கம் செய்ய முற்படுகிறார். வெளியாரின் தலையீடின்றி பிரச்சினையைத் தீர்க்க வருமாறு தமிழர்களை அழைத்திருக்கிறார். போரில் வெல்வதற்கு அவர்களுக்கு வெளிநாடுகளின் ஆயுதமும் உதவிகளும் தேவை. ஆனால் சமாதானத்துக்கு அது தேவையில்லையாம். தமிழ்த் தரப்பு அதை ஏற்கக்கூடாது.இந்தியாவையும் உள்ளடக்கிய ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தத்தைக் கேட்கவேண்டும்.அந்த மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தத்தின்கீழ் சிங்கள- தமிழ் - முஸ்லிம் மக்கள் கூட்டாட்சிக்கான ஓர் அரசியல் உடன்படிக்கையை எழுதுவதற்காகப் பேசவேண்டும். மேலும் இலங்கை அரசாங்கத்தை பிணை எடுக்க முயலும் ஐ.எம்.எப் போன்ற அனைத்துலக அமைப்புக்களிடம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்பதை பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு முன்நிபந்தனையாக வைக்குமாறு நிர்ப்பந்திக்க வேண்டும்


ரணில் இப்பொழுது நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு ஜனாதிபதி. தந்திரமும் நிறைவேற்று அதிகாரமும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. ரணில் ஒரு நரி. அவர் தந்திரங்கள் செய்வார் என்று தமிழ்த்தரப்பு தங்களுக்குள் புறுபுறுத்துக் கொண்டிருக்க முடியாது. தமிழ்மக்கள் தாங்களும் புத்திசாலிகள் என்பதனை நிரூபிக்க வேண்டிய ஆகப்பிந்திய தருணம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையில்லை என்பதன் அரசியல்

## வடக்கு - கிழக்கை மையப்படுத்திய அரச பொறிமுறைக்குப் பின்னால் உள்ள ஆபத்துகள்

○ அ.நிக்ஸன்




ஈழத்தமிழர்களை முடிந்தவரை இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் இணைந்து வாழக்கூடிய அளவுக்கு மாற்றும் வகையில், அரசசார்பற்ற நிறுவனங்கள், சர்வதேசப் பிரதிநிதிகள், குறிப்பாக இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் தூதுவர் எரிக் சொல்கெய்ம் மற்றும் சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஊடாக , சில திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களுக்குப பின்னால் இலங்கை அரசாங்கம் மிக நுட்பமாகச் செயற்பட்டு வருகின்றது.

2009 க்கு முன்னர் - போர் முடிவடைவதற்கு முன்னர் - கையாளப்பட்ட அதே அணுகுமுறைகள் தற்போது மீண்டும் கனகச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக ராஜபக்ச குடும்பம் கையாண்ட அதே உத்தியை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரான சூழலில், தனது சர்வதேச இராஜதந்தரத் தொடர்புகள் ஊடாக அரசியல் ரீதியாக மேற்கொள்கிறார் என்பது பட்டவர்த்தனம்.

இந்த மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்த தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஷலாக் (Schalk) தலைமையிலான தூதுக்குழு, வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் உள்ளிட்ட பலரைச் சந்தித்து மீள்குடியேற்றங்கள் குறித்துக் கலந்துரையாடியிருந்தது.

அதன்போது தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை இல்லை என்றும் இதனால் அரசியல் தீர்வு கிடைத்தாலும், அதனை எப்படிக் கையாளுவீர்கள்? எனவும் உயர்ஸ்தானிகள் மீள்குடியேற்றக்குழுவிடம் கேட்டிருக்கிறார்.

இவ்வாறு கேட்டு சில நாள்களில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, தமிழ்த்தேசியக் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லை எனவும் இதனாலேயே அரசியல் தீர்வு குறித்துப் பேச முடியாதுள்ளதாகவும் கூறியிருக்கிறார்.





அதற்கு அடுத்த சில நாள்களில் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்துப் பேச வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கூறியதுடன் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் அழைப்பும் விடுத்தார். ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்புத் தொடர்பாக உரையாடுவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்குத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்தார். ஆனால் பங்காளிக் கட்சிகள் அதற்கு மறுப்பு வெளியிட்டுள்ளன. சுமந்திரனின் அழைப்பும் பங்காளிக் கட்சிகளின் மறுப்பும் மேற்படி ஒற்றுமை இல்லை என்று கூறியவர்களின் கருத்துக்கு மேலும் வலுச்சேர்த்திருக்கின்றன. ஆனால் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகள் ஷலாக், ஈழத்தமிழர்கள் சார்ந்த உண்மையான நோக்கத்துடனேயே ஒற்றுமை பற்றிய தனது கவலையை வெளிப்படுத்தியிருந்தார்.

தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியதன் பின்னணியில் நச்சுத்தனமான அரசியல் உண்டு. தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லை என்று இந்தியத் தூதுவர் உள்ளிட்ட இந்தியப் பிரதிநிதிகள் பலரும் அவ்வப்போது கூறுவது வழமை. இங்கே தென்னாபிரிக்கா மாத்திரமே எப்போதும் ஈழத்தமிழர் பக்கம் நின்றுதான் கருத்துக்களைக் கூறியிருக்கிறது. ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் தென்னாபிரிக்காவை சரியான முறையில் கையாளவில்லை.

அவ்வாறு கையாண்டிருந்தால். குறைந்தபட்சம் ஈழத் தமிழர்களுக்காகச் சர்வதேச அரங்கில் குரல் கொடுக்கும் ஒரேயொரு நாடாகத் தென்னாபிரிக்காவை மாற்றியிருக்கலாம். மாறாக தென்னாபிரிக்காவைச் சிங்கள ஆட்சியாளர்கள் 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இராஜதந்திர முறையில் அணுகி, அரசுக்கு அரசு என்ற உறவை வளர்க்க ஆரம்பித்துவிட்டனர். அது ஐ.நா. விதிகளுக்கு அமைவானதும் கூட.

ஆகவே 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் கையாளும் சக்திகளாகவே தமிழ்த்தேசியக் கட்சிகள் செயற்படுகின்றன என்ற கருத்து தென்னாபிரிக்கா உள்ளிட்ட அரசுகளிடம் உண்டு என்பதையே தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகள் ஷாலாக் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் கொழும்மை மையமாகக் கொண்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் கொழும்பை மையமாகக் கொண்ட சர்வதேச அரசசார்பற்ற நாடுகளின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை நான்கு தடவைகள் தனித்தனியாகவும் வெவ்வேறாகவும் சந்தித்து உரையாடியிருக்கின்றனர். இவற்றில் அநேகமான சந்திப்புக்கள் பற்றிய தகவல்கள் ஊடகங்களில் வெளிவரவில்லை.

கட்சிகளிடையே உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்தி ஒருமித்த குரலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் செயற்பட்டு விடக்கூடாதென்ற சிங்கள ஆட்சியாளர்களின் விருப்பங்களுக்கு இவர்கள் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் என்பதையே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மேற்படி சில சந்திப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

கொழும்பை மையமாகக் கொண்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் ஏன் அவ்வாறு செயற்படுகின்றனர் என்றால், இலங்கை அரசு என்பது அவர்களுக்குத் தேவை என்பதே பதில் . சமகாலப் புவிசார் அரசியல் - புவிசார் பொருளாதாரச் சூழலில் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தை மையமாகக் கொண்டு இலங்கை அவசியமாகின்றது. அதுவும் ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் இந்தப் பிராந்தியம் சர்வதேசத்துக்கு மிகமுக்கியமானது.

இதனால் அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் இந்தியா போன்ற ஆசியப்பிராந்திய நாடுகளிடம், 2009 க்குப் பின்னரான் சூழலில் ஈழத்தமிழர் விவகாரம் என்பது உள்ளகப் பிரச்சினை என்றுதான் சிங்கள ஆடசியாளர்கள் விளக்கமளித்து வருகின்றனர்.

அத்துடன் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் ஈழத்தமிழர்கள் வாழமுடியும் என்ற செய்தியையும், தமிழ்த்தேசியக் கட்சிகள் மற்றும் சிங்களக் கட்சிகளுடன் இணைந்திருக்கும் தமிழ் உறுப்பினர்கள் எல்லோருமே இணக்க அரசியலுக்குத் தயார் என்றும், சிங்கள ஆட்சியாளர்கள் விளக்கமளித்திருக்கிறார்கள்.

ஆனால் இதுவரையும் தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைவர்கள் எவரும் அவ்வாறான பொறிமுறை ஒன்றை அல்லது கட்சி அரசியலுக்கு அப்பால் சர்வதேச நாடுகளைக் கையாளக்கூடிய ஆற்றல் உள்ள பிரதிநிதிகள் எவரையும் நியமிக்கவுமில்லை. மாறாக அமெரிக்கா, இந்தியா சொல்வதை மாத்திரமே கேட்கின்றனர். இதன் காரணமாகச் சிங்கள ஆட்சியாளர்களுடன் பேரம்பேசி இலங்கைத்தீவில் தமக்குத் தேவையானதை வல்லாதிக்க நாடுகள் பெற்றுச் செல்கின்றன. இலங்கை தொடர்பான வல்லாதிக்க நாடுகளின் போட்டிகளுக்குள் சிங்கள ஆட்சியாளர்கள் புகுந்துவிளையாடி, தமது இலங்கை ஒற்றையாட்சி என்ற கோட்பாட்டை நிறுவி வருகின்றனர். 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் அதற்குரிய பொறிமுறை ஒன்றை அமைத்து வடக்கு - கிழக்கிலும் சிங்கள ஆட்சியாளர்கள் செயற்படுத்தி வருகின்றனர்.

அந்தப் பொறிமுறைக்குள் அரச உயர் அதிகாரிகள், உயர் இராணுவ அதிகாரிகள் ஒத்துழைக்கக்கூடிய தமிழ் அதிகாரிகள் ஆகியோர் உள்ளடங்கியிருக்கின்றனர்.

இந்த அதிகாரிகள் குழு கொழும்பை மையமாகக் கொண்ட குழு கொழும்பை மையமாகக் கொண்ட வன இலகா திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், காணி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து சட்டரீதியாகவும் செயற்பட்டு வருகின்றன.

ஆகவே இந்தப் பொறிமுறைக் கட்டமைப்போடுதான் கொழும்பை மையமாகக் கொண்ட வெளிநாட்டுத் தூதுவர்களும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் தொடர்பாடலை வைத்திருக்கின்றனர்.

இந்தத் தொடர்பாடலுக்குள் தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைவர்களும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அறிந்தோ அறியாமலோ சிக்கிக் கொண்டுள்ளனர். அவ்வப்போது நாடாளுமன்றத்தில் காரசாரமாகக் கண்டித்துப் பேசினாலும், மேற்படி பொறிமுறைக் கட்டமைப்பின் செயற்பாடுகளை அவர்களால் நிறுத்தமுடியவில்லை.

2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலையை அறவழியில் தொடர்ந்து முன்நகர்த்த வேண்டிய பொறுப்பு, விரும்பியோ விரும்பாமலோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கைக்குச் சென்றிருந்தது. ஆனால் அதனை ஒழுங்குமுறையில் கொண்டு செல்லமுடியாமல், சிதறவைத்துக் கையாளப்படும் சக்திகளாக மாற்றப்பட்டுள்ள நிலையில், வடக்கு- கிழக்கை மையப்படுத்திய சிங்கள ஆட்சியாளர்களின் மேற்படி பொறிமுறைக் கட்டமைப்பின் செயற்பாடுகளை இனிமேல் தடுக்கவே முடியாது.


(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா மருத்துவமனையின் தோற்றமும் மருத்துவர் கிறீனும்

## யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: சில குறிப்புக்கள் 12

○ பா. துவாரகன்


மருத்துவர் கிறீன்

**யாழ். போதனா மருத்துவமனையின் தாபகர் சேர். பேர்சிவல் ஒக்லண்ட் டைக் (Sir Percival Acland Dyke)**

சேர் பேர்சிவல் ஒக்லண்ட் டைக் யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவர். டைக் 01.10.1829 அன்று யாழ்ப்பாணத்தின் கலெக்டராகப் பதவியேற்றார். கோல்புறூக் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய கலெக்டர் பதவி அரசாங்க அதிபர் பதவி எனப் பெயர் மாற்றப்பட்டது. கலெக்டராகப் பதவி வகித்த டைக் 01.10.1833 அன்று யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபராகப் பதவியேற்றார்.

டைக் அவர்களது மனதில் யாழ்ப்பாணத்திலே ஒரு பொது மருத்துவமனையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக இருந்ததாக சேர் வில்லியம் துவைனம் குறிப்பிடுகிறார் (Some account of the work done by the American Mission Medical School: By Sir William Twynam). துவைனம், டைக்கின் மறைவையடுத்து யாழ். அரச அதிபராகக் கடமையாற்றியவர்.

அமெரிக்க மிஷனரி மருத்துவர் கிறீன் மானிப்பாயில் ஆற்றி வரும் மருத்துவப் பணியை நன்கு அறிந்து கொண்ட பேர்சிவல் ஒக்லண்ட் டைக் யாழ். நகரிலே மருத்துவமனையை ஆரம்பிக்க விரும்பி கிறீனது உதவியை நாடினார்.


**யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகம்**

யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகம் (Jaffna FriendInNeedSociety) 1841 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்களுக்கு உதவும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கழகத்தின் முதலாவது பொதுக்கூட்டம் 1841 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி நீதிமன்ற வளாகத்தில் கப்டன் கோச்சேரன் தலைமையில் நடைபெற்றது. வண. பீற்றர் பேர்சிவல் பாதிரியார், கிறீனியர் ஆகியோர் இதன் நோக்கம் செயற்பாடுகள் பற்றி உரையாற்றினர். அங்கத்தவர்களிடம் மாதாந்தம் 8 ஸ்ரேர்லிங் பவுண் அறவிடுவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அரச அதிபர் டைக் ,யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தின் உதவியுடன் 700 பவுண் ஸ்ரேர்லிங் நிதியை யாழ். நகரில் பொது மருத்துவனையை நிறுவுவதற்காகத் திரட்டினார்.

பேர்சிவல் ஒக்லண்ட் டைக் , உவெஸ்லியன் மிஷனரியைச் சேர்ந்த வண. பீற்றர் பேர்சிவல் பாதிரியார், மருத்துவர் கோல்டன் மற்றும் அமெரிக்க மிசனரி மருத்துவர் கிறீன் ஆகியோரது உதவியுடன் 1850 ஆம் ஆண்டு யாழ். நகரத்தில் மருத்துவமனையை நிறுவினார். இன்று 1300 இக்கும் அதிகமான படுக்கை வசதிகளுடன் 2000 க்கும் அதிமான அரச உத்தியோத்தர்கள் பணியாற்றும் யாழ். போதனா மருத்துவமனையானது 1850 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தின் ஆதரவில் இந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டதாலும் இந்தக்கழகமே ஆரம்பத்தில் மருத்துவமனையை நிர்வகித்து வந்ததாலும் இந்த மருத்துவமனையானது 'ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தினது மருத்துவமனை' என்று அழைக்கப்பட்டது.


யாழ்.போதனா மருத்துவமனையில் தாபகர் சேர் பேர்சிவல் ஒக்லண்ட் டைக்


சேர் வில்லியம் துவைனம்


வண.பீற்றர் பேர்சிவல் பாதிரியார்

டைக் ஏறத்தாழ 38 வருடங்கள் யாழ்ப்பாணத்தின் (வடமாகாண) நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றியவர். யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவி நண்பர்கள் கழக மருத்துவமனைக்கு தனது சம்பளத்தின் பெரும்பகுதியைக் கொடுத்து உதவியவர். முற்றவெளியில் உலாவிய தீவட்டிக் கள்வர்களைக் கட்டுப்படுத்தி யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கைப் பேணியவர். டைக்கின் ஆட்சியில் யாழ்ப்பாண மக்கள் அச்சமற்று வாழ்ந்தார்கள்.


**1852 இல் யாழ்ப்பாணத்தில் ஆங்கில மருத்துவ சேவை**

"ஆதுலர்க்குச் சாலை, அறுசமயத்தவர்க்கு உணவு, ஓதுவார்க்கு உண்டி...."

முதலான 32 அறங்களை தமிழ்க் கலைக்களஞ்சியமான அபிதான சிந்தாமணி பட்டியல் இட்டுள்ளது. ஆதுலர்- நோயுற்றோர். பேர்சிவல் ஒக்லண்ட் டைக், யாழ். நகரிலே மரங்களை நடுகைசெய்து, வனத்தை உருவாக்கியும் மருத்துவமனையை நிறுவியும் அறம் வளர்த்தார். யாழ்ப்பாணம் ஆபத்துக்குதவி மருத்துவமனை 1850 இல் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதியில் ஏழ்மையில் வாழ்ந்த மக்கள் ஆங்கில மருத்துவத்தின் நன்மையை இலகுவாகப் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

நோயுற்ற ஒருவர் ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக அங்கத்தவரிடம் அல்லது மருத்துவமனைக்குச் சந்தா செலுத்தும் அங்கத்தவர் ஒருவரிடம் விண்ணப்பித்து பற்றுச்சீட்டு ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். காலை 8.00 மணிக்கு மருத்துவமனைக்குச் சமூகமளித்து மருத்துவரிடம் சிட்டையைக் கையளித்து சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையே ஆரம்பத்தில் இருந்தது.

தொலைவிலிருந்து நடந்தும் , மாட்டு வண்டிலிலும் மானிப்பாய் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றவர்கள் யாழ். நகரிலே ஆரம்பிக்கப்பட்ட ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் சிகிச்சைபெறத் தொடங்கினர். யாழ்ப்பாணத்திலும் மானிப்பாயிலும் ஐரோப்பிய மருத்துவம் பொதுமக்களிடையே பரவலடைந்து வளர்வது கிறீனுக்கு மகிழ்ச்சியை அளித்தது.


YOUNG MEN EDUCATED BY AMERICAN MEDICAL MISSION BEGINNING TO COME FORWARD IN 1848

The young men educated by the American Medical Mission were then beginning to come forward. There was no Government Hospital or Dispensary of any kind in Jaffna at that time, except the Military and Government Hospitals in the Fort. The American Mission had an out-door dispensary at Manippay.

JAFFNA FRIEND-IN-NEED SOCIETY HOSPITAL,' FOUNDED 1850 BY MR. DYKE

It was at this time that Mr. Dyke began to see his way towards raising funds for the erection of a General Hospital in connection with the Friend-in-Need Society, Jaffna, the erection of a hospital having been a scheme he had had in mind for twenty years. With the assistance of the Rev. Mr.

1852 ஆம் ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் ஆபத்துக்குதவி மருத்துவமனையில் 3000 பேருக்கும் மானிப்பாயிலிருந்த கிறீனது மருத்துவமனையில் 2500 பேருக்கும் சிகிச்சை வழங்கப்பட்டது. இக்காலப் பகுதியில் கிறீனும் அவரது உதவி மருத்துவர்களும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரமுடியாத நிலையிலிருந்த 500 பேர்களது வீடுகளுக்குச் சென்றும் சிகிச்சை அளித்தனர். யாழ்ப்பாணத்தில் ஓராண்டு காலத்தில் மொத்தமாக 6000 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அப்போது யாழ்ப்பாணத்தின்(வடபகுதி) சனத்தொகை 3 இலட்சம் மட்டுமே.

இன்று (2022) வடபகுதியில் வசிக்கும் 1.2 மில்லியனுக்கும் அதிகமானவர்களது பிரதான மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரேயோரு மூன்றாம் நிலை மருத்துவமனையாக விளங்கும் (Tertiary Care Hospital) யாழ். போதனா மருத்துவமனையில் மாத்திரம் நாளாந்தம் 5000 க்கும் அதிகமானவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்படுகிறது. இவர்களில் 1200 க்கும் அதிகமானவர்கள் உள்ளக விடுதிகளில் சிகிச்சை பெறுகின்றனர். 2000 இக்கும் அதிகமானவர்கள் தினசரி கிளினிக்குகளில் சிகிச்சை பெறுகின்றனர். அதேவேளை 1000 க்கும் மேற்பட்டவர்கள் நாளாந்தம் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

*(தகவல்: மருத்துவர் த. சத்தியமூர்த்தி, பணிப்பாளர், போதனா மருத்துவமனை யாழ்ப்பாணம்)*

**மருத்துவர் கிறீன் யாழ்.போதனா மருத்துவமனைக்கு வழங்கிய தலைமைத்துவம்!**

அரச அதிபர் டைக் மருத்துவர் கிறீனை ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக மருத்துவமனையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொண்டார். கிறீன் அமெரிக்க மிஷனரிகளுடன் ஆலோசித்த பின்னர் 1863 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 3 மாதங்கள் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்குச் சம்மதித்தார். பின்னர் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக மருத்துவமனையின் நிர்வாகியாகப் பொறுப்பேற்று மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரியாகச் செயற்பட்டார். கிறீன் 1873 இல் அமெரிக்காவுக்கு நிரந்தரமாகத் திரும்பும் வரை இம் மருத்துவமனையின் வருகை சத்திர சிகிச்சை நிபுணராக ஆரம்பம் முதல் பணியாற்றினார்.

**பேர்சிவல் ஒக்லண்ட் டைக்கின் மறைவும் யாழ். போதனா மருத்துவமனை தாபகர் தினமும்**

கோப்பாயில் வசித்துவந்த ஒக்லண்ட் டைக் 1867 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி அன்று இயற்கை எய்தியபோது யாழ்ப்பாணத்தில் 5 நாள்கள் அரச அலுவலகங்கள் பூட்டப்பட்டு பொதுமக்கள் துக்கம் அனுட்டித்தனர். 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் சமூகப் பெரியார் ஒருவரது மறைவின் போது இதுபோன்று நீண்ட நாள் துக்கம் அனுட்டித்ததில்லை. 1985 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி பாரதப் பிரதமர் இந்திரா காந்தி . மெய்ப்பாதுகாவலர்களால் சுடப்பட்டு உயிர்நீத்த போது இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் பெருந்துயருற்று துக்கம் அனுட்டித்தனர்.

சேர் பேர்சிவல் ஒக்லண்ட் டைக் மறைந்த ஒக்ரோபர் 9ஆம் திகதி யாழ். போதனா மருத்துமனையின் தாபகர் தினமாக நினைவு கூரத்தக்கது.

**மருத்துவக் கல்வியைத் தொடராது இடைவிலகிய கிறீனது மாணவர்கள்**

கிறீனது மருத்துவக் கல்லூரியில் 2 ஆவது அணியில் (1851-1853) பயின்ற மாணவர்களில் ஜோசப் எச் ரவுண் (பூபாலசிங்கம்) யாழ்ப்பாணம் ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் அரச சேவையில் (நிர்வாக, எழுதுவினைஞர்) இணைந்து கொள்வற்காகவும் சாமுவேல் மில்லர் (வேலுப்பிள்ளை) அரச நிர்வாக நடைமுறைகளைக் கற்பதற்காகவும் மருத்துக்கல்வியை இடையிலே கைவிட்டுச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை செமினரியில் பயின்று பட்டம் பெற்றவர்களுக்கு அரச சேவையில் உயர் பதவியும் அதிக சம்பளமும் கிடைத்தது. கிறீனது 2ஆவது வகுப்பில் பயின்ற 5 மாணவர்களில் மேற்குறிப்பிட்ட இருவரும் அதிக வருமானமும் அந்தஸ்தும் மிக்க அரசசேவையில் இணைவதற்காக மருத்துவக்கல்வியைக் கைவிட்டு விலகி இருக்கலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

1505–1948 வரை

அந்த சிறுமியின் தாய் கூறியதைக்கேட்டு எமது திருச்சபைப் பெண்மணி மிகவும் மகிழ்ச்சியடைந்தார். தன்னிடம் கல்வி பயின்ற உள்ளூர்ச் சிறுமி தனக்கு மகளாக வருவதையிட்டு அவர் மகிழ்ச்சியடைந்தார். அவர் அந்தச் சிறுமிக்கு தமிழில் உள்ள 247 எழுத்துக்களையும் எழுதப்பழக்கினார். முற்றத்திலுள்ள மண்ணை அள்ளிக் கொண்டு வந்து விறாந்தையில் பரப்பி விட்டு அந்தச் சிறுமிக்கு தமிழில் உள்ள 247 எழுத்துக்களையும் எழுதப்பழக்கினார். அந்த சிறுமியுடன் சேர்ந்து விளையாடும் ஏனைய சிறுமிகள் இவர் மணலில் எழுதுவதை பார்த்துவிட்டு இது ஒரு வகையான புதிய விளையாட்டு என எண்ணி அவர்களும் இந்தப் புதிய விளையாட்டை கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டினர்.

தமிழ்ச் சிறுமிகளுக்கு ஞாபகசக்தி அதிகம்; அவர்கள் சில நாள்களிலேயே எழுத, வாசிக்க பழகிவிட்டனர். இதைப்பார்த்ததும் அந்தச் சிறுமிகளின் பெற்றோர் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். இதனையடுத்து பெற்றோர் தமது பிள்ளைகளை எமது விடுதிப்பாடசாலைக்கு அனுப்பத்தொடங்கினர்.

Miss Agnew 1824 ஆம் ஆண்டு உடுவில் விடுதிப்பாடசாலை தலைமை பொறுப்பை ஏற்ற நாள் முதல் ஓய்வின்றி (விடுமுறை காலத்திலும் தனது வீட்டுக்கு அமெரிக்காவுக்கு திரும்பிச்செல்லாமல் ) கடமையற்றினார். அவரது பதவிக்காலத்தில் 1000 மாணவிகளை அவர் உருவாக்கியுள்ளார். ஆரம்பகால மாணவிகளின் பேரப்பிள்ளைகளுக்கும் கல்வி புகட்டியுள்ளார். அவர் மாணவிகளால் பெரிதும் விரும்பப்படுகிறார். சுமார் ஆயிரம் மாணவிகள் அவரை அம்மா என அழைக்கின்றனர். இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவிகளில் 600 பேர் கிறிஸ்தவத்தால் கவரப்பட்டு கிறிஸ்தவர்களாக வெளியேறியுள்ளனர்.

அவர் சுகவீனமுற்றிருந்த போது நாங்கள் அவரிடம் "நாங்கள் உங்களுக்காக பிரார்த்தனை செய்யட்டுமா?" என்று கேட்டதற்கு அவர், "நீங்கள் எனக்காக விசேட பிரார்த்தனையில் ஈடுபட வேண்டாம்; யாழ்ப்பாண பெண்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள்" என்றார். அவர் "நீங்கள் யாழ்ப்பாண பெண்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள்" என்று கூறிய நேரத்தில் உள்ளூர் கிறிஸ்தவப் பெண்கள் தமது அறைகளில் அவருக்காக பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர். கடவுள் இவர்களின் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு விட்டார்.

அவரது இறுதிச்சடங்கு பெரிய அளவில் நடைபெற்றது. அதில் உள்ளூர்ப் போதகர்கள், ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், அவரிடம் கல்வி பயின்ற மாணவிகள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். அவரிடம் கல்விபயின்ற மாணவிகள் தமது கணவர், பிள்ளைகள் என்போருடன் கலந்து கொண்டனர். அனைவரின் கண்களும் கண்ணீரால் நிரம்பியிருந்தன.

இங்குள்ள இந்துக்கள் பலருக்கு கிறிஸ்துவை தெரியாது. அவர்கள் இப்போதும் ஆடுவதிலும் பாடுவதிலுமே ஈடுபட்டு வருகின்றனர். தமது பிள்ளைகளுக்கும் இதனையே போதித்து வருகின்றனர்.

## யாழ்ப்பாணக் கல்லூரி

யாழ்ப்பாணக் கல்லூரியில் இப்போது 167 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். ஏழு ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலை வளாகத்திலேயே தங்கவேண்டும் என்ற நடைமுறை அமுலில் உள்ளது. இந்த மாணவர்களுக்கு கிறிஸ்தவ சம்பிரதாயங்கள் போதிக்கப்படுகின்றன. விபூதி பூசுதல் போன்ற சைவ மத சம்பிரதயங்களிலிருந்து இவர்கள் விலக்கி வைக்கப்படுகின்றனர். உயர்சாதி மாணவர்கள் பலர் ஆர்வத்துடன் இணைந்து கல்வி கற்று வருகின்றனர் . இவர்களிடம் அனுமதிக்கட்டணமாக ஒரு ஸ்ரேர்லிங் பவுணும் கல்விக்குரிய கட்டணமாக மூன்று ஸ்ரேர்லிங் பவுணும் அறவிடப்படுகிறது.

இந்து உயர்சாதி மாணவர்கள் கிறிஸ்தவ மாணவர்களுடனேயே தங்க வேண்டும், தூங்க வேண்டும். அத்துடன் காலை மாலை பிரார்த்தனையிலும் ஈடுபட வேண்டும், பைபிள் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும், கிறிஸ்தவ அறநெறிப் பாடசாலைக்கு செல்ல வேண்டும். இங்கு 362 மாணவர்கள் கல்வி பயின்றனர். இங்கு கல்வி கற்ற மாணவர்கள் 142 பேர் இலங்கையிலும், இந்தியாவிலும் ஆசிரியர்களாகவும் கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களாகவும் பணி புரிகின்றனர்.

யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்களின் YMCA துடிப்பாக செயற்பட்டு வருகிறது. இவர்கள் பாடசாலைக்கு வரும் இந்து மாணவர்களை மதமாற்றம் செய்வது மட்டுமன்றி அயலிலுள்ள கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள அறநெறிப்பாடசாலைகளில் கல்வி கற்கும் 400 மாணவர்களுக்கும் போதிக்க வேண்டும். இவர்கள் கடந்த மூன்று நான்கு வருடங்களாக நயினாதீவில் மதமாற்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் நயினாதீவில் பாடசாலை ஒன்றைக்கட்டி அங்குள்ள ஆசிரியருக்குரிய சம்பளத்தை முழுமையாக வழங்குகின்றனர். பாடசாலை மைதானத்துக்கு அருகில் உள்ள காணியில் கிரிக்கெட் விளையாடுவது தவிர்ந்த நேரங்களில் விவசாயம் செய்து அதில் வரும் வருமானத்தைக்கொண்டே ஆசிரியருக்கு சம்பளம் வழங்குகின்றனர்.

*(வரலாறு நீளும்)*

> குறிப்பு: யாழ்ப்பாண வரலாற்று தொடரில் தற்போது இடம் பெற்று வரும் சம்பவங்கள் யாவும் (Seven Years in Ceylon)நூலாசிரியரின் கருத்துகளே. கட்டுரையாளரின் கருத்துக்கள் எதுவுமில்லை. கட்டுரையாளர் மொழிபெயர்ப்பை மட்டுமே செய்து வருகிறார்.





# கால்களின் திருவிழா!

ஆர்.பிரகாஷ்

22 ஆவது கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் கட்டாரில் இன்று 'கட்டார் ஈக்குவடோர்' அணிகளுக்கு இடையிலான மோதலுடன் ஆரம்பமாகின்றது. இதன்மூலம் உலகக்கிண்ணத் தொடரை நடத்திய 18 ஆவது நாடு என்ற பெருமையைப் பெறுகின்றது கட்டார். உலகக் கிண்ணத் தொடரை கட்டார் நடத்துவது இதுவே முதன்முறை. இந்தத் தொடரை கட்டார் நடத்துவதில் ஒன்றல்ல, இரண்டல்ல ஓராயிரம் சிக்கல்கள். அத்தனையையும் தாண்டி பூகோளத்தில் இயல்புநிலைக்குச் சவால்விட்டு, பில்லியன் கணக்கான டொலரைக் கொட்டி இந்தக் கால்பந்துத் திருவிழாவை கட்டார் நடத்திக் காட்டுகின்றது.

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரை நடத்த கட்டார் எதிர்கொண்ட சவால்கள், அவற்றை கட்டார் முறியடித்த விதம் என்பன தொடர்பில் பிறிதொரு பதிவில் பார்ப்போம். இன்று பார்க்க விருப்பது விளையாட்டுலகில் மிகப்பெறுமதியானது என்று கருதப்படும் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கு சாத்தியக் கூறுள்ள அணிகள் பற்றிய அலசலே.

## வாய்ப்புள்ள அணிகள்

இந்தத் தொடரில் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்புள்ள அணிகளாக ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா, பிரேசில், பிரான்ஸ், ஸ்பெய்ன் ஆகியவை கருதப்படுகின்றன. நான்கு தடவைகள் கிண்ணத்தை வென்ற இத்தாலி இந்த வருடம் தகுதிச் சுற்றுடன் வெளியேறியுள்ளது. சர்வதேசத் தரப்படுத்தலில் ஆறாவது இடத்திலுள்ள அந்த அணியின் வெளியேற்றம் கொடுத்த அதிர்ச்சியில் இருந்து இன்றளவும் இத்தாலியின் ரசிகர்கள் மீளவில்லை. அந்த வகையில் கட்டார் உலகக்கிண்ணம் இத்தாலியர்களுக்கு ஒரு துர்க்கனவே.

சர்வதேசத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள பிரேசில் ஆறாவது தடவையாக கிண்ணத்தை ஏந்தும் கனவுடன் களமிறங்குகின்றது. பிரேசிலின் தங்கமகன் என்று அறியப்படுபவரும் அந்த நாட்டுக்கு மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்தவருமான பீலேக்கு தற்போது 82 வயது.

இந்தக் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றி அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் பிரேசிலில் வலுப்பெற்றுள்ளன. அதற்கேற்ப துடிப்புமிக்க வீரரான நெய்மர் தலைமையில் ரபின்ஹா, கஸ்மிரோ, மார்செலோ என்று ஒரு தாக்குதல் படையே களமிறங்குகின்றது. 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை கிண்ணத்தைக் கைப்பற்றாத பிரேசில் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் தன் கிண்ணக் கனவை மெய்ப்படுத்த இந்தத் தொடரில் கடுமையாகப் போராடும் என்று நம்பலாம்.

## நடப்புச் சம்பியன் என்னாகும்?

2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் கிண்ணத்தை வென்று நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் இந்தத் தொடரில் பிரான்ஸ் களமிறங்குகின்றது. ஆனால், கடந்த தொடரைப்போன்று இந்தத் தொடரில் பிரான்ஸ் சாதிக்குமா? என்றால் பதில் சந்தேகமே. உபாதைகள் பிரான்ஸை ஆக்கிரமித்துள்ளன. ம்பேப்பே, கிறீஸ்மன், போக்பா, வானி என்று பலமான வீரர்கள் உள்ள போதிலும் மாறிமாறி வந்த உபாதைகளால் அணி தனது ரிதத்தை கொஞ்சம் இழக்கவே செய்துள்ளது. ஜேர்மனி மற்றும் ஸ்பெய்ன் அணிகளுக்கும் இம்முறை வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுகின்றது.

ஸ்பெய்ன் அணி கடந்த யூரோ கிண்ணத் தொடரில் இளையவர்களை வைத்துக் கட்டமைத்தது. இப்போது அந்த அணிக்குள் கொஞ்சம் அனுபவம் புகுந்துள்ளது. ஜேர்மனி அச்சமில்லாத ஆட்டத்தை அண்மைக்காலமாக வெளிப்படுத்தி வருகின்றது.

## கவனக்குவிவில் ஆர்ஜென்ரீனா

கால்பந்தாட்ட உலகின் ஜாம்பவான்களில் ஒருவரான மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி மீதும் இம்முறை எதிர்பார்ப்பு மிகைந்திருக்கின்றது.

தென்னமெரிக்க நாடுகளுக்கு இடையிலான கோபா அமெரிக்க கிண்ணத்தைக் கைப்பற்றிய ஆர்ஜென்ரீனா அணி கடந்த இரண்டு வருடங்களாகவே பொறிபறக்கும் விளையாட்டை வெளிப்படுத்துகின்றது. பவுல், மொலினா, மரியா உள்ளிட்ட வீரர்கள் ஆர்ஜென்ரீனவுக்கு மேலும் பலம் சேர்க்கின்றனர். ஆர்ஜென்ரீனா அணிக்கு அருமருந்ததாக கிண்ணத்தை வென்று கொடுக்க மீண்டும் ஒருமுறை தன்னை பட்டைத் தீட்டிக் கொண்டுள்ளார் மெஸ்ஸி. இந்தத் தொடர் அநேகமாக மெஸ்ஸியின் கால்பந்து வாழ்க்கையைத் தீர்மானிப்பதாக இருக்கும்.

## போர்த்துக்கல், குரோசியா

கிரிக்கெட்டுக்கு எவ்வாறு நியூசிலாந்தோ அவ்வாறுதான் கால்பந்துக்கு போர்த்துக்கலும் குரேசியாவும். திறமைக்குப் பஞ்சமில்லாதவை இந்த அணிகள். றொனால்டோவின் தலைமையில் போர்த்துக்கலும் மோட்ரிச் தலைமையில் குரோசியாவும் களமிறங்குகின்றன. 2016ஆம் ஆண்டு யூரோ கிண்ணத்தைக் கைப்பற்றியமைதான் போர்த்துக்கலின் ஆகக்கூடுதலான அடைவாக இருக்கின்றது. றொனால்டோ அந்தக் கிண்ணத்தை வென்று போர்த்துக்கலின் பல தசாப்தகால காத்திருப்பை முடிவுக்குக் கொண்டுவந்த போதிலும் உலகக்கிண்ணத் தொடருக்கான அந்த நாட்டின் காத்திருப்பு இன்னும் தொடர்கின்றது.

றொனால்டோ போன்ற வீரரை வைத்துக் கிண்ணம் வெல்லாவிட்டால் இனி எப்போதும் கிண்ணம் இல்லை என்ற நிலைதான் போர்த்துக்கலுக்கு. ஆதலால், அந்த அணிக்கு இதுவொரு வாழ்வா சாவா நிலை. அத்துடன், 37 வயதாகும் றொனால்டோவுக்கு இது அனேகமாக இறுதி கால்பந்தாட்டத் தொடராக இருக்கலாம். ஆதலால், போர்த்துக்கலும் இம்முறை பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேநேரம் கடந்த உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரையில் முன்னேறிய குரோசியா இம்முறையும் அவ்வாறானதொரு அதிர்ச்சியை வழங்குமா? என்ற நம்பிக்கையும் இம்முறை பெரியளவில் இருக்கவே செய்கின்றது.

ஒலிம்பிக் தொடருக்கு அடுத்ததான உலகின் மிகப்பெரும் விளையாட்டுத் தொடரான கால்பந்தாட்ட உலகக்கிண்ணம் என்னும் தன்னிகரற்ற மகுடத்தை நோக்கிய பயணம் ஆரம்பித்திருக்கின்றது.

அதிர்ச்சியும், ஆச்சரியங்களுக்கும் அழுகைகளுக்கும், ஆர்ப்பரிப்புகளுக்கும் பஞ்சமில்லாமல் நகரும் கால்பந்தாட்டத் தொடரின் இந்தப் பருவகாலம் எவ்வாறு அமையப்போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்






என்.அர்ச்சனா.
தரம்-8
யா/உடுவில் மகளிர் கல்லூரி



நல்லராசா
தரம்-11
யா/வயாவிளான் மத்திய கல்லூரி



சி.டர்ஷன்
தரம் - 7
யா/இந்துக் கல்லூரி



நிலா
தரம் - 9B
மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்



உ. சஜிந்தன்
தரம் - 6A
வ /தமிழ் மத்திய மகா வித்தியாலயம்



சு. ஹன்சிகா
தரம் - 4
யா /ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசலை



க.திஷான்
தரம் 11
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



எஸ்.அவந்திக்கா
தரம் - 2B
யா /கண்டுக்குளி மகளிர் கல்லூரி




சுவஸ்ரிகா
தரம் -8B
யா/வேம்படி மகளிர் கல்லூரி.

**மாணவர்களே!**
நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com





# உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி

- உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியை பிபா (FIFA) சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தி வருகிறது.
- கால்பந்து உலகக் கோப்பைத் தொடர் சர்வதேச அளவில் கால்பந்து ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் விளையாட்டுத் திருவிழா.
- 2022 ஆம் ஆண்டுக்கான உலகக்கோப்பை கால்பந்துத் தொடர் கட்டாரில் இன்று 20ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
- கடைசியாக 2018ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடந்த போட்டியில் பிரான்ஸ் மகுடம் சூடியது. உலகக் கால்பந்துப் போட்டி வரலாற்றில் பிரேசில் ஐந்து முறை உலகக் கோப்பையைக் கைப்பற்றிய அணியாகும்.
- இந்த ஆண்டு எட்டு பிரிவுகளில் 32 அணிகள் போட்டியிடுகின்றன. இதில் 5 முறை சம்பியனான பிரேசில், நடப்பு சம்பியன் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி, இங்கிலாந்து, நெதர்லாந்து, அர்ஜென்டினா, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, டென்மார்க், போர்த்துக்கல், உருகுவே, பெல்ஜியம் உட்பட 32 அணிகள் களமிறங்குகின்றன.
- இதுவரை எட்டு நாடுகள் மட்டுமே கோப்பையை வென்றுள்ளன. பிரேசில் ஐந்து முறையும், ஜெர்மனி மற்றும் இத்தாலி தலா 4 முறையும் வென்றுள்ளன. இம்முறைக்கான போட்டிக்காக கட்டாரில் மொத்தம் 8 மைதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- இதற்கென கட்டார் விழாக்கோலம் பூண்டுள்ளது. பல இடங்களில் உலகக்கோப்பை வீரர்களின் புகைப்படங்கள், ராட்சத கால்பந்துகள் மற்றும் உலகக் கோப்பை மாதிரிகள், விளம்பரப் பலகைகள் என்பன மக்களின் கண்ணைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.



## ஆண்டு நிறைவில் கொண்டாடும் விழாக்கள்

1. ஒரு வருடம் - காகித விழா
2. ஐந்து வருடம் - மரவிழா
3. பத்து வருடம் - தகரவிழா
4. இருபத்தைந்து வருடம் - வெள்ளிவிழா
5. முப்பது வருடம் - முத்துவிழா
6. நாற்பது வருடம் - மாணிக்கவிழா
7. ஐம்பது வருடம் - பொன்விழா
8. அறுபது வருடம் - வைரவிழா
9. எழுபத்தைந்து வருடம் - பவளவிழா
10. எண்பது வருடம் - அமுதவிழா
11. நூறாவது வருடம் -நூற்றாண்டுவிழா

**கே.கஜானா,**
*தரம்-5, யாழ்ப்பாணக் கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிக்காவல்

பேராசிரியர் கி.விசாகரூபன்



கிராமம் எண்டாலே அழகுதானே . அப்படி ஒரு அழகான கிராமத்துக்குச் சொந்தக்காரன் நான். என்ர ஐயாவின் கடை வருமானம் குடும்பத்தை நடத்தப் போதுமாயிருக்கவில்லை. பக்க வருமானத்துக்காக அளவான ஒரு சிறிய தறையைக் குத்தகைக்கு எடுத்து எல்லோரும் ஒண்டு சேர்ந்து தோட்டம் செய்தோம். தீவுப்பகுதியாரை தூக்கிவிட்டது இரண்டு விசயம் தான். ஒண்டு கல்வியறிவு, அடுத்தது பணப்பயிர்ச்செய்கை. அப்ப தேத்தண்ணிக்கடை எங்க போய்ச்சுது ? எண்டு நீங்க நினைக்கிறது எனக்கு நல்லா விளங்குது. சரி, அதுவும்தான் எண்டு வையுங்கோவன்.

தோட்டத்தில இன்னவேலை இன்னாருக்கு எண்டு ஒண்டும் கிடையாது. பெரிய அண்ணமார் படிப்பு, பிறசோலிகள் எண்டு வெளிக்கிட, பின்வழத்தால நாங்க மூண்டுபேர் தோட்டத்தில மாட்டுப்பட்டம். எனக்கு துலா இழுக்கிற வேலையும், கிளி கலைக்கிற வேலையும் பெரும்பாலும் அமைஞ்சுபோகும். பள்ளிக்கூடம் போகுமுன்னமும் பின்னரும் இந்த வேலைகள் பெரும்பாலும் இருக்கும். அடித்துலாவில கட்டப்பட்ட ஒரு அளவான கயிறைக்கொண்டு இந்தத் 'துலா இழுப்பு' நடக்கும். கிணத்துக்குள்ள போடப்பட்ட வாளிக்குள்ள தண்ணி கோலியவுடன் கயிறை இழுத்துவிட வேணும். 'ரைமிங்' பிழைச்சால் இறைக்கிறவன் என்ர கன்னத்தில இழுப்பான். அதனால பெரும்பாலும் என்ர இழுப்புப் பிழைக்காது. சிலர் துலாவின்ர ஆடுகதியால்களிடையே பிணைத்துவிடப்பட்ட கயிறைப் பற்றிப்பிடித்தபடி துலாவின் மேலேறி நின்றும் மிதித்து விடுவர்.


மிளகாய் முத்திய பருவம் கிளிகளுக்கு கொண்டாட்டமாயிருக்கும். காவலுக்குப் போறவருக்கு அது 'ஏழரைச்சனிக் காலம்'. என்ர குஞ்சியாச்சி சொன்னது இண்டைக்கும் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. அவ சொல்லுவா 'இரண்டு வேலையளப் பொறுப்பு எடுக்கக்கூடாது' எண்டு. ஒண்டு பிள்ளை பிராக்காட்டுறது, இரண்டாவது கிளி கலைக்கிறது. இரண்டு 'ஜற்றமும்' எந்தநேரம் என்ன வேலை செய்யும் எண்டு எதுவும் சொல்ல முடியாது. அவ்வளவு சோலி.

இப்படித்தான் ஒருநாள் எனக்குக் கிளிக்காவல்முறை. கிளியை ஓட்டுறதுக்கெண்டு மரபுப் பாதுகாப்புப் பொறிமுறை ஒண்டும் இருந்தது . அது என்னவெண்டால் தறைக்குக் குறுக்கால நீளமாகக் கட்டியிருக்கிற பெருங்கயிறு ஒன்றின் இடையிடையே கல்லுப்போடப்பட்ட 'ரின்பால்' பேணிகளைக் கட்டி, 'கிலுகிலுப்பை' செய்து ஒலி எழுப்புவது. பெருங்கயிறுடன் இணைக்கப்பட்ட சிறு கயிறு கொண்டு இருந்த இடத்தில் இருந்து இந்த 'ஆட்டுதல்' நடக்கும். உற்சவமூர்த்தியின் கையில் தொடுக்கப்பட்டு பிரதான கும்பத்துக்கு தொடுக்கப்படும் நூல்போல எண்டு வையுங்கோவன். தோட்டத்தில் நான் என்ன வேலைக்கு வந்திருக்கிறன் எண்டு நினைப்பு வரும்போதெல்லாம் 'பேணிக்கயிறு' ஆட்டல் இடம்பெறும். காலப்போக்கில் இந்தக் 'கிலுகிலுப்பை' கிளிகளுக்குப் பழக்கமாகியிருக்க வேணும். ஆட்டுதலும் சம்பிரதாயமாகிவிட்டது.

கிளிகலைப்பு வேலையைக் குழப்புகிற சோலிகளில கிளுவங்கதியாலை வளைச்சுப் பொன்வண்டு பிடிச்சு நெருப்புப்பெட்டிக்க விடுகிறது, செம்பலத்தம் பூச்சி பிடிக்கிறது, தும்பியைப் பிடிச்சு அதன் வாலில நூலைக்கட்டிப் பறக்கவிடுவது, கிணத்துக்க இறங்கிக் குளிக்கிறது, கலக்கிறது எண்டு கனக்க இருந்திச்சு.

இப்படி நான் வேறு சோலிகளில் மூழ்கியிருக்கும்போது ஒரு கிளிப்பட்டாளம் மிளகாய்க்கண்டுக் கூடலுக்குள்ள தரையிறங்கியிருக்க வேணும். என்ர கஷ்டகாலத்துக்கு அது எனக்குத் தெரியாமல் போய்ச்சுது. (கிளியும் பச்சை, கண்டும் பச்சை) ஆனாலும் ஒரு 'ஊட்டுக்க' கிளி இந்த வேலை செய்தாலும் செய்யும் எண்ட நினைப்பில ஒரு இலக்கில சிறு கல்லொண்ட விட்டெறிஞ்சன். ஒரு கிளிப்பட்டாளமே சிறகடிச்சு வானத்தில எழும்பிச்சுது. எனக்கோ தலைச்சுத்தல். கிட்டப்போய் பார்த்தால் செம்பழங்கள் எல்லாம் கோதுப்பட்டு சிதறிக்கிடந்திச்சு. வீட்டாருக்குத் தெரியாமல் எப்படி மிளகாயை மறைக்கிறது எண்டு யோசிச்சன். 'ஈரத்தறைக்குள் ஆழப்புதைப்பதே சாலச்சிறந்தது 'என எட்டாம் வகுப்பு மூளை சொல்லிச்சுது. கோதிய மிளகாய்கள், கொட்டைகள் என எல்லாமே என்னால் 'முறைப்படி அடக்கம்' செய்யப்பட்டன.

அடுத்தநாள் விடிஞ்சா இறைப்புமுறை. வழக்கமாக இறைக்கிறவன் அண்டைக்கெண்டு என்னை இறைக்கச் சொன்னான். மறுக்கவா முடியும்? தண்ணிகட்டும்போது பாதக்காலால் மிளகாய்க் கண்டுகளின் வேரடிக்கு தண்ணீரை விசிறிஅடிப்பது வழக்கம்.
பாத்தி நிறைஞ்ச தண்ணிக்குள்ள பலமான விசிறல் நடந்தது. என்ர கெட்டகாலம், முதல்நாள் தாட்ட மிளகாய்கள், கொட்டைகள் என வரிசைகட்டி மிதக்கத் தொடங்கிட்டுதுகள். எல்லாமே பிழைச்சுப்போச்சு. கிளியைக் கோதவிட்டது, கோதிய மிளகாயை வீட்ட கொண்டுவரமால் தாட்டது என இரண்டு குற்றச்சாட்டுக்கள் என்மீது. பிறகு சொல்லவா வேணும்? உங்களுக்கொண்டு தெரியுமோ.



கிளி கோதிய மிளகாயை அளவான உப்பில போட்டு அவிச்சுக் காயப்போட்டு புட்டுக்குப் பொரிச்சுத் திண்டால் ஒரு நீத்துப்பெட்டி புட்டு எந்த இடைஞ்சலும் இல்லாமல் இறங்கும். கிளி பதமான மிளகாயைத்தான் கோதும் . கோணல்வாணலான கோதலில உப்பு சகட்டுமேனிக்கு இறங்கி மிளகாய்க்கு உரிசை கூட்டும். அதைப் பொரிக்கிற வாசமிருக்கே! அப்பப்பா.... என்னத்தச் சொல்ல. இப்ப வெண்டால் அதைத்திண்டால் 'கிளிக்காய்ச்சல்' வரும் எண்டு சொல்லுவினம்.



கிளி கோதிய மிளகாயை அளவான உப்பில போட்டு அவிச்சுக் காயப்போட்டு புட்டுக்குப் பொரிச்சுத் தின்டால் ஒரு நீத்துப்பெட்டி புட்டு எந்த இடைஞ்சலும் இல்லாமல் இறங்கும். கிளி பதமான மிளகாயைத்தான் கோதும் .


# ஒற்றுமையில்லை

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு சிக்கலான சூழல் உருவாக இடமளித்த ஒரு நிலையில், இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை பங்களிப்பு வழங்க வேண்டுமெனச் சம்பந்தன் தற்போது கேட்டிருக்கிறார்.
கொழும்பில் கடந்த திங்கட்கிழமை ஐ.நா.வின் அரசியல் பிரிவுத் தலைவரைச் சந்தித்து உரையாடியபோது இந்த வேண்டுகோளை சம்பந்தன் விடுத்திருக்கிறார்.
அதுவும் 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்து ஜெனிவா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பலவீனப்படுத்திய நிலையில் ஐ.நா. வின் பங்களிப்பை எதிர்பார்க்கிறார் சம்பந்தன்.
வடக்கு மாகாண உறுப்பினர்களுக்கு மாத்திரம் ரணில் அழைப்பு விடுத்துள்ள நிலையில் ஐ.நா. அரசியல் பிரிவுத் தலைவர் சந்தித்திருக்கிறார் என்றால், கிழக்கு மாகாணம் சிங்களப் பிரதேசம் அல்லது கிழக்கில் தமிழ்த்தேசியம் இல்லை என்ற செய்திகூட சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கின்றது.
அத்துடன் மஹிந்த ராஜபக்ச 2006 இல் இலங்கை உயர் நீதிமன்றத்தின் மூலமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரித்ததை நியாயப்படுத்தியும் ரணில் வடமாகாணசபை உறுப்பினர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுத்திருக்கிறார் என்பதும் கண்கூடு.
ஆகவே சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்க, பேராசிரியர் பீரிஸ், மிலிந்த மொறகொட, அமரர் மங்கள சமரவீர, மஹிந்த சமரசிங்க, கோத்தாபய ஆகியோர் வெவ்வேறு கட்சிகளாக இருந்தாலும், போருக்கு முன்னரும் போருக்குப் பின்னரும் ஈழத்தமிழர் விவகாரத்தில் சர்வதேசத்தைக் கையாள்வதில் ஒரே குரலில் செயற்பட்டு வந்த நுட்பமான இந்தத் திட்டங்களைக்கூட தமிழ்த் தேசியக் கட்சிகள் இதுவரை தெரிந்துகொள்ளவில்லையா?
இவர்கள் சிங்களத் தேசியத்துக்காகச் சர்வதேசத்தைக் கையாளும் நுட்பமான இராஜதந்திரிகள் என்பதை இந்திய ஊடகங்கள் கூட ஒரு கட்டத்தில் பாராட்டியுமிருந்தன.
ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்றுவரை கூட தெரிந்தும் தெரியாதது போன்று இருப்பதுதான் வேடிக்கை. 2009 இல் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சில சமயங்களில் இந்தியா ஈழத்தமிழர்களுக்குச் சாதகமான நிலைப்பாட்டை எடுத்துவிடலாம் என்ற சந்தேகத்தில், மிலிந்த மொறகொட துரொய்க்கா (troika) எனப்படும் மூவர் கொண்ட உயர்மட்டக் குழுவை அமைத்து இந்தியாவைக் கையாண்டார். அதிலே பஸில் ராஜபக்சவும் அங்கம் வகித்திருந்தார்.
இதனை மஹிந்த ராஜபக்சவின் செயலாளராகப் பதவி வகித்திருந்த லலித் வீரதுங்க 'பிற்.எல்.கே' என்ற இணையத்தளத்துக்கு வழங்கிய நேர்காணலில் பகிரங்கமாகவே சொல்லியிருந்தார்.
இன்றும் கூட இந்தியாவைச் சிங்கள ஆட்சியாளர்கள் இவ்வாறுதான் கையாள்கிறார்கள். குறிப்பாக மிலிந்த மொறகொட புதுடில்லியில் இலங்கைக்கான தூதுவராகத் தற்போது பதவி வகிக்கிறார். மிலிந்த மொறகொடவுக்கு கோத்தாபய ராஜபக்ச வழங்கிய தூதுவர் நியமனத்தை ரணில் விக்கிரமசிங்க நீடித்திருக்கிறார்.
அதாவது இந்தியா தமிழர்கள் பக்கம் சென்றுவிடக் கூடாதென்பதில் சிங்களம் இன்றுவரை குறியாகவே இருக்கிறது.
ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தியாவைக் கையாளாமல், இந்தியாவினால் கையாளப்படும் சக்தியாகவே மாறிவிட்டது. அமெரிக்கா சொல்வதையும் கேட்கிறது. அதனைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஒளிந்திருந்து வேடிக்கை பார்க்கிறது.
ஆகவே தேர்தல், கட்சி என்ற அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால், சிங்கள ஆட்சியாளர்கள் சர்வதேசத்தை வளைத்துப்போட குழு அமைத்துச் செயற்பட்ட பொறிமுறைபோன்று, ஆற்றல் உள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ்த் தேசிய நிலைப்பாடு தொடர்பாக ஒருமித்த குரலில் செயற்பட வேண்டிய காலமிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி




110

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. ஆறுதலாக 5. மத்தி 6. திருமணத்தால் பெண்ணுக்குக் கிட்டும் அடைமொழி 7. ஓர் உறுப்பு 8. ஆகாயம் 9. துஞ்சுக 11. பரி 12. தானியம் 13. நிலை 14. கேள்வி 15. முருகனின் மறுபெயர் 17. சிநேகிதி 18. பருவம் 19. படைவீரர் நிலையம் 21. திரைக்குப் பின்னால்/ மறைவில் நடப்பது 22. நித்திரையில் வருவது

### மேலிருந்து கீழ்

1. இது இரண்டொழிய வேறில்லை 2. ஊதியமாக உழைப்பது 3. மன்மதன் 4. ஓர் சொல் (தீய எண்ணமும்கூட) 5. வழங்கு 7. (ஒன்றின்) பாகம் 9. இரண்டு நிலையங்களுக்கு இடைப்பட்டது 10. திட்டுவது இப்படி 11. சிவப்பு இரத்தம் 12. வரலாற்றுப்போக்கு 13. ஓர் கணிதக்குறி 14. பூமிக்கு வெளியே உள்ளவெளி 16. மீனாட்சியின் ஆட்சி இங்கே 17. எங்களின் எனப் பொருள் 20. தூக்கிச் செல்

### சொற்சிலம்பம் போட்டி 109 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சபதம் 4. எமது 7. குலம் 8. யாத்திரை 9. புகழ்தல் 11. தகராறு 14. லைலா 15. வலி 16. சரி 17. சாதல் 19. புதிய 20. காரம் 21. நண்பன் 22. தும்பிக்கை 23.தினை

**மேலிருந்து கீழ்**

1. சகுந்தலை 2. பல 3. தம்புரா 4. எத்தன் 5. மதில் 6. துரை 8. யாழ். 10. கறுவல் 12. கலாசாரம் 13. பெரியன்னை 16. சதிபதி 18. தம்பி 19. புண் 20.காது 21.நகை

**சொற்சிலம்பம் போட்டி இல.110**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**25.11.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 109 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**திரேஸ்குமார் சங்கவி**
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி

**2 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்**
கள்ளி வீதி,
வட்டுக்கோட்டை

**3 ஆம் பரிசு**
**சு.வினோதினி**
நாவாந்துறை

**4 ஆம் பரிசு**
**வி.அருள்நேசன்**
புங்கன்குளம் வீதி,
அரியாலை

**5 ஆம் பரிசு**
**[illegible]**
18, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்

# அறிந்தும் அறியாமலும்

சுழியன்




## ஆட்சி கவிழாது

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுவரும் நிலையில், நவம்பர் 22 ஆம் திகதி – மாலை இரண்டாம் வாசிப்பு மீது வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இதன்போது பாதீட்டுக்கு எதிராக வாக்களிப்பதற்கு எதிரணியில் உள்ள முக்கியமான சில கட்சிகள் தீர்மானித்துள்ளதுடன், பாதீட்டைத் தோற்கடித்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும் மந்திராலோசனை நடத்தப்பட்டுவருகின்றதாம். ஆனாலும் பாதீட்டை தோற்கடித்தால், அரச நிர்வாகப்பொறிமுறை முற்றாக முடங்கிவிடும் என்பதால் இது விடயத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயக்கம் காட்டிவருகிறதாம்.

மறுபுறத்தில் பாதீட்டை தோற்கடிக்கும் முயற்சியில் இறங்கினால், தமது அணியில் உள்ள பலரை ஜனாதிபதி வளைத்துபோட்டுவிடுவார் என்ற அச்சமும் பிரதான எதிர்க்கட்சிக்கு உள்ளதாம். எனவே, பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தாலும், ஆட்சி கவிழ்ப்புக்கான நடவடிக்கையை பாதீடு ஊடாக முன்னெடுக்காது என்றே உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாகய, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை என்பன பாதீட்டை எதிர்க்கும் நிலைப்பாட்டிலேயே உள்ளனவாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் பாதீட்டை எதிர்க்கும் அல்லது வாக்கெடுப்பை புறக்கணிக்கவுள்ளன.

## அடடே, ரணில்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சுறு சுறுப்பான நடவடிக்கை தொடர்பில் மொட்டுக் கட்சி எம்.பிக்கள் சிலர் பிரமிப்பில் உள்ளனராம். தாங்கள் நினைத்த ரணில் வேறு, தற்போது உள்ள ரணில் வேறு என தனக்கு நெருக்கமானவர்களிடம் அவர்கள் முணுமுணுத்து வருகின்றனராம்.

"நாம் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தால் குறைந்தது 2 நாட்களாவது ஓய்வெடுப்போம், ஆனால் ஜனாதிபதி வெளிநாட்டிலிருந்து வந்த கையோடு சபைக்கு வந்து பதில்களையும் வழங்கியுள்ளார், அட என்ன மனிதர்" என ரணிலை பாராட்டியும் உள்ளனராம்.

இப்படியான ஜனாதிபதியே நாட்டுக்குத் தேவை எனவும், அடுத்த தேர்தலில் அவர் போட்டியிட்டால் நிச்சயம் ஆதரவு வழங்கவேண்டும் என அவர்கள் கூறிவருகின்றனராம்.

இதற்கிடையில் தென்னாபிரிக்க ஜனாதிபதி இலங்கைக்கு குறுகியகால பயணமொன்றை நவம்பர் 16 ஆம் திகதி மேற்கொண்டபோது, ஜனாதிபதி ரணில் செயற்பட்ட விதமும் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. தென்னாபிரிக்க ஜனாதிபதியின் பிறந்தநாளை ஞாபகம் வைத்து, கேக் வெட்டுவதற்கான ஏற்பாடுகளை ரணில் செய்தமையே இந்த வியப்புக்குக் காரணமாம்.

## போனால் போகட்டும்

"ராஜித போனால் போகட்டும், தாவல் அரசியலென்பது அவருக்கு கைவந்தகலை, இனியாவது உள்ளக சூழ்ச்சிக்காரர்கள் குறித்து விழிப்பாகவே இருங்கள். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் காட்டமாகத் தெரிவித்துள்ளனராம் ஐக்கிய மக்கள் சக்தியின் பின்வரிசை எம்.பிக்கள் சிலர்.

சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றின்போது, ராஜித சேனாரத்ன கட்சி தாவவுள்ளார் என வெளியாகிவரும் தகவல்கள் பற்றியும் பேசப்பட்டுள்ளது. அவ்வேளையில், "இது பற்றி நானும் ராஜிதவிடம் கேட்டேன், அவர் இல்லை எனச் சொன்னார் எனக்கூறி சஜித் சமாளிக்க முற்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இக்கூற்றை எம்.பிக்கள் ஏற்கவில்லை, சஜித் ஏதோ சமாளிக்கின்றார் என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

"தலைவரே, அவர் சென்றுவிடுவார் போல்தான் தெரிகிறது. களுத்துறையில் தெரிவான குமார வெல்கம போய்விட்டார், ராஜிதவும் போனால் போகட்டும், ஆனால் உள்ளக சூழ்ச்சிக்காரர்கள் தொடர்பில் நாம் விழிப்பாகவே இருக்க வேண்டும், இல்லையேல் கட்சி காணாமல்போய்விடும்" எனக் கூறினராம்.

## நிறுத்தப்பட்ட கூட்டங்கள்

கட்சிக்குள்ளேயே எதிர்ப்புகள் வலுத்ததால் தொகுதிவாரியாக நடத்திவந்த கூட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்துள்ளது.


ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியானது 'ஒன்றாக மீண்டெழுவோம்' எனும் தொனிப்பொருளின்கீழ், கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் கூட்டங்களை நடத்திவந்தது. இதன்படி முதலாவது கூட்டம் களுத்துறையிலும், இரண்டாவது கூட்டம் நாவலப்பிட்டியவிலும் மூன்றாவதுக் கூட்டம் புத்தளம் ஆராச்சிகட்டுவயிலும் நடைபெற்றன. எனினும், இக்கூட்டத்துக்கு பிரசன்ன ரணதுங்க உட்பட மொட்டுக் கட்சி எம்.பிக்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் இப்படியான கூட்டங்கள் அவசியமில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாறான தொடர் பின்புலத்திலேயே கூட்டங்கள் பிற்போடப்பட்டுள்ளன.

மொட்டுக் கட்சி ஸ்தாபகரான பஸில் ராஜபக்ச நவம்பர் 20 ஆம் திகதி நாடு திரும்புகிறார், அதன் பின்னர் மொட்டுக் கட்சியின் கட்சி மேம்பாட்டு திட்டங்கள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஊரிலும்தான்...

13



சி.கதிர்காமநாதன்

வாடகை ஒழுங்காக கொடுத்திடுவீங்க. இப்ப வீடு தேவை"
இவருக்கு என்ன பதில் சொல்வது? காலி பண்ணிக் கொடுப்பது இலகுவான காரியமா? நான் எப்படி வேறு இடம் எடுக்க முடியும்?
அவரிடம் என் நிலையைச் சொன்னேன். அவர் அதை எடுத்துக் கொள்ளவில்லை. "தம்பி. நான் செட்டியாரிடம் ஏற்கனவே சொல்லிட்டேன். இந்த அறையை உங்களுக்கு எடுத்துக் கொடுத்ததே அவர்தான். எப்படியும் இரண்டு மாசத்துக்குள்ள காலி பண்ணிக் கொடுத்திடும். ஏதோ நல்லபடியா முடிஞ்சால் நல்லது" என்று சொன்னபடி என்னை ஒருமாதிரி பார்த்தார்.

▣ ▣ ▣ ▣

செட்டியார் வீடு மாறிப் போய் ஒரு கிழமையாகிவிட்டது. நான் இதை எதிர்பார்க்கவில்லை. அவரிடம் என் பிரச்சினை தொடர்பாகப் பேசமுன். அவர் போய்விட்டார். எதிர் பிளாட்டில் அவர் குடியிருந்தாலும் அவருடன் தொடர்புகள் குறைவாகவே இருந்தன. காரணம் வீட்டிலே செட்டியாரைப் பார்ப்பது அரிது. காலையில் எத்தனை மணிக்குப் போகிறார். எத்தனை மணிக்கு வருகிறார் என்பது தெரியாது. சில நேரங்களிலே இரவு பன்னிரண்டு மணிக்கு மேலே பார்த்ததுண்டு. பஸ் ஒப்பிசில் பஸ் வேலைக்காக மார்வாடியிடம் பெருந்தொகைப் பணம் வாங்கியதாகத் தகவல். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருநாள் என்னிடம் கூறியது நினைவுக்கு வந்தது.
"இந்த இடம் ராசியில்ல. வேற இடம் பார்த்தா தேவலை"
முடிவில் இடம் மாறி விட்டார். புரசைவாக்கத்திலே தான் வீடு எடுத்திருப்பது தெரிந்தது.
' இனி என்ன செய்வது? எனக்கு இவர் மூலம்தான் வீடு எடுக்க முடியும். வேறுவழி தெரியவில்லை. இவர் உதவி செய்யாவிட்டால்...'
யோசிக்க யோசிக்க விசர் பிடிப்பது போன்றிருந்தது. முதலாளியை அவசரமாகக் கூப்பிடலாமா? முடிந்த காரியம். செட்டியாரைச் சந்தித்து விடயத்தைச் சொன்னேன். அவரும் பெரிதாக யோசனை செய்தார்.
"சிலோன்காரருக்கு இப்ப வீடு தரமாட்டாங்க. இருந்தாலும் முயற்சி பண்றேன்"
அவ்வளவுதான் மறுபடியும் வீட்டு உரிமையாளர் ஞாபகப்படுத்திவிட்டுப் போனவர். சிதம்பரத்தின் அப்பாவிடம் கதைத்திருந்தேன். அவருடன் மாம்பலத்தில் வீடு பார்க்கச் சென்றேன். புறோக்கரும் உடன் வந்தார். பல வீடுகளைப் பார்த்தோம். கையை விரித்து விட்டார்கள்.
"சிலோன்காரருக்கு வீடு கொடுத்தா நாங்களும் பொலிஸ் ஸ்ரேசன் போக வேண்டியதுதான்"
பேச்சைத் தொடராமல் உடன் அனுப்பி வைத்தார்கள். எனக்கு என்னவோ போலாகிவிட்டது. திரும்பவும் வீட்டு உரிமையாளர் வந்தால் இன்னும் கொஞ்சம் தவணை கேட்கும்படி சிதம்பரத்தின் அப்பா சொன்னார்.
நான் கேட்டபோது,
"நாங்கள் நண்பர்களாகவே பழகுவோம்" என்று சொல்லி விட்டார்.
செட்டியாரை மறுபடியும் சந்தித்தேன். பலனில்லை.
இப்படிச் செய்யலாமா?
பிரச்சினைக்குச் சுலபமான வழி யோசிக்க வேண்டியதில்லை யாரையும் கெஞ்சவேண்டியதில்லை. விமான ரிக்கற் புக் பண்ணிவிட்டு இங்கிருந்து கிளம்பிவிடலாம். யாருக்குத் தெரியப்போகிறது. இரண்டு மூன்று நாள்கள் பார்ப்பார்கள். எங்கேயாவது வெளியூர் போயிருப்பதாக நினைப்பார்கள். நாள்கள் நகர உண்மை தெரியவரும். இப்படியே செய்து விடலாம். பிறகு என்ன சொல்வார்கள்?
"அப்பவே நாங்க சொன்னோம். சிலோன்காரங்களை நம்பக் கூடாது. கடைசில இப்படிப் பண்ணிட்டுப் போய்ட்டான்."
வேண்டாம் இந்தப்பேர் வரக்கூடாது. மொத்தமாக எல்லோர் மேலும் பழி போட்டு விடுகின்றனர். என்னால் இந்த அவப்பெயர் வரக்கூடாது. என்ன கஷ்டம் வந்தாலும் இந்தத் தவறைச் செய்யக்கூடாது.
பின் என்னதான் செய்வது?
பின்னேரம் சிதம்பரத்தின் அப்பா என்னைத் தனியாக அழைத்துச் சென்றார்.
"முரளி. அசோக் நகர்ல எங்களுக்குத் தெரிஞ்ச ப்ளாட்ல ரூம் இருக்கு. கொஞ்சம் புறம்போக்கான ஏரியா. நமக்குத் தெரிஞ்சவங்க. உமக்கும் நல்லது. அங்கபோய் இருந்து கொண்டு ஊருக்குப்போற அலுவலப் பாரும். தனியா இருக்கக் கூடாது"
எனது வீட்டுக்காரர் என்னைக் காலி பண்ணச் சொன்னது எல்லோருக்கும் தெரிந்து விட்டது. இதுபற்றி யாரும் என்னுடன் கதைக்கவில்லை.
'கடவுளே! அசோக் நகரில் இடம் கிடைத்தால்....'
அசோக் நகரில் வீடு எடுத்து இரண்டு நாளாகிவிட்டது. நேரம் இரவு இரண்டு மணிக்குமேலிருக்கும். மின்சாரம் இல்லை. அதனால் பல்கனி கதவைத் திறந்தபடி படுத்திருந்தேன். புது இடம் நித்திரை வரவில்லை. திடீரெனக் கதவு தட்டப்பட்டது. சட்டென்று எழுந்தேன்.
"இந்த நேரத்தில் என்னைத் தேடி யார் வந்திருப்பார்கள்?"
வெங்கிட்டுதான். வீடுமாறும்போது கூட நின்று உதவியவன். உதயம் தியேட்டரிலே படம் பார்த்துவிட்டு வந்திருப்பானோ?
மறுபடியும் கதவு தட்டாமல் இடிக்கப்பட்டது. இதற்கு மேலும் பொறுக்காமல் வெளியே வந்து பார்த்தபோது, நான் அவர்களுக்கு வேண்டப்பட்டவனாக இருந்தேன். உடல் விறைத்தது. ஏன் இப்படி வந்திருக்கிறார்கள்? மூன்று பெரிய வாகனங்கள் வரிசையாக நிற்க, பலர் ஆயுதங்களை நீட்டியபடி நின்றகோலம். என் ஒருவனுக்கு இத்தனைபேரா?
நான் கதவைத் திறந்ததும் என்னைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்த வேகம்!

> இவர்களுக்கு எப்படி விளங்க வைப்பது? குறுக்கெழுத்துப் போட்டிக்குத் தயார் செய்த பெயர்கள் அவை. அது இப்படியா சிக்கலில் மாட்டி விடும்? மறுபடியும் குடைந்தார்கள். முடிவிலே என் வாசற் கதவைப் பூட்டச் செய்து கீழே இறக்கிக் கொண்டு போனார்கள். அவர்களின் மத்தியிலே நான் தளர்ந்தபடி நடந்தேன்.

இருவர் என்கைகளை இறுகப்பிடித்தபோது ஒருவன் என் கழுத்தைப் பிடித்து அதிலிருந்த கறுப்புக் கயிறை உருவி அறுத்துவிட்டான்.!
"சார் ஒன்னையும் காணம். வெறும் கயிறுதான்"
"நல்லாப் பாருங்க அதில தான் பூட்டியிருப்பாங்க"
அந்த நேரத்தில் என்னைச் சுற்றி எத்தனை பேர்? நித்திரைக் கலக்கத்திலே ஒன்றும் தெரியவில்லை.
யார் சொல்லி வந்திருப்பார்கள்? அதுவும் இந்த இரண்டு நாள்களுள் விசாரணை, விசாரணை.
"மாம்பலத்தில பதிஞ்சால் மட்டும் போதுமா? இங்க வந்து நம்ம ஸ்ரேசனில பதிய வேணாம்?"
"வந்து இரண்டு நாள்தான்..."
"இந்தக் கதையெல்லாம் வேணாம்"
இந்தவேளை வீட்டிலே கிடந்த பொருள்களை ஏனையோர் சிந்திச் சிதறி அலசினார்கள்.
எதைத் தேடுகிறார்கள்?
"சார்! இதைப்பாருங்க"
அந்த வெள்ளைத் தாளில் இருந்ததை அவர் வாசித்தார்.
"என்ன எங்க ஊர் பெரியவங்க பேரெல்லாம் எழுதிவைச்சிருக்கு"
இவர்களுக்கு எப்படி விளங்க வைப்பது? குறுக்கெழுத்துப் போட்டிக்குத் தயார் செய்த பெயர்கள் அவை. அது இப்படியா சிக்கலில் மாட்டிவிடும்? மறுபடியும் குடைந்தார்கள். முடிவிலே என் வாசற் கதவைப் பூட்டச் செய்து கீழே இறக்கிக் கொண்டு போனார்கள். அவர்களின் மத்தியிலே நான் தளர்ந்தபடி நடந்தேன். என்மனக்கண்ணிலே, எத்தனையோ ஆபத்துக்கள் இருந்தாலும் பாதுகாப்பு நிறைந்து, இப்போது ஓரளவு சுதந்திரம்மிக்க எனது சொந்த ஊர் தெரிந்தது. மனதுடன் உடலும் நொந்துகொண்டிருந்தது. அறைக்குள் நான் வாங்கிய அடிகள். சற்று விடியத் தொடங்கியது.
தெருவிலே கும்பலாகச் சனங்கள் நின்றார்கள்.
கண்களில் நீர் அடைத்துக்கொண்டது.
அந்த ஜீப்பிலே என்னை ஏற்றியபோது நன்றாகப் பார்ப்பதற்காக எல்லோரும் ஆவலாக மொய்த்தார்கள்.
இப்போது என்னை 'சிலோன்காரன்' என்று அழைக்காமல் வேறு பெயர் சொல்லி அழைத்தார்கள்.
சூரியன் உதிக்கத் தொடங்கியிருந்தான்,
எனது ஊரிலும்தான்.

*(நிறைந்தது)*

---

# வரலாற்றை திரும்பிப் பாரீர்...



பண்டாரவன்னியனின் நிலமதிலே!
வரலாற்றை மாற்றும் கயவர்களே!
வரலாற்றைக் கொஞ்சம்
திரும்பிப் பாரும்
தமிழர் வரலாற்று மலையிது
வற்றிய காட்டாற்றில்
வறண்டு கிடப்பது தமிழன்
வாழ்க்கைச் சக்கரமும் தான்

ஆதி சிவனைக் கும்பிட்ட தமிழனை
அடியோடு அழிக்கவென
குருந்தூர் வனம் நுழைந்தால்
தாரா லிங்கம் கண்திறக்கும்
வீரவேர்கள் முறுக்கெடுக்கும்
விழுதுகள் நூற்றாண்டை
பறை சாற்றும்
பசுமை வனமாளிகையில் எம்
விருட்சத்தை பிடுங்க
யாராலும் முடியாது.

எங்களின் கடல்களை
எங்களின் வயல்களை
எங்களின் ஆறுகளை
எங்களின் மலைமுகடுகளை
உங்களின்
கோணிப் பையில் வைத்து
உங்கள் சந்ததிக்கு
கொடுத்துவிடமுடியாது

புலியின் உறுமல்
வடிவில்
ஓர் அசரீரி கேட்கிறது
தமிழா....

- பலாலி எஸ்.

---

# பாஸ்தா பாயசம்



பாஸ்தா அல்லது மக்ரோனி - முக்கால் கப்
பால் - 2 கப்
வெல்லப்பாகு - அரை கப்
ஏலக்காய் - 2
நெய் - 1 டேபிள் ஸ்பூன்
முந்திரி மற்றும் உலர் திராட்சை - தேவைக்கேற்ப
பச்சரிசி மாவு (வறுத்தது) - 1 1/2 டேபிள்ஸ்பூன்

**செய்முறை**

அடிகனமான அகன்ற பாத்திரத்தில் 4 கப் தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும். கொதிக்கும் நீரில் பாஸ்தாவை சேர்த்து 2 முதல் 3 நிமிடங்கள் வரை வேக விடவும். வெந்ததும் தண்ணீரை வடிகட்டி வைக்கவும். பின்பு மற்றொரு அடி கனமான பாத்திரத்தில் நெய்யை ஊற்றி முந்திரி உலர் திராட்சை இரண்டையும் பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும்.
வறுத்த முந்திரி, உலர்திராட்சைகளை வடிகட்டி எடுத்துவிட்டு அந்தப் பாத்திரத்தில் பாலை ஊற்றி நன்றாகக் கொதிக்க விடவும். பால் நன்றாக கொதிக்க ஆரம்பித்ததும் அதில் வேகவைத்த பாஸ்தாவை சேர்க்கவும். பால் சுண்ட ஆரம்பிக்கும் வேளையில் அரிசிமாவை கட்டியில்லாமல் கரைத்து பாலில் சேர்த்து கிளறவும். கலவை நன்றாக கொதித்து வரும்போது நசுக்கிய ஏலக்காயை சேர்க்கவும். அடுப்பிலிருந்து இறக்கி வெல்லப்பாகை சேர்த்து கலக்கவும். அருமையான பாஸ்தா பாயாசம் ரெடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org